Registered No. M. 878

367

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion,
Science, Art and Civilization

தொகுதி 6 } 1916௵ மார்ச்சு௴ ராக்ஷஸ௵ மாசி௴ { பகுதி 11.

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.

## CONTENTS

பக்கம்.


1. தற்கால நிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 361
(From the Editor)—R. Rangaswamy Iyer.

2. திருக்குறளாராய்ச்சி—யம். சுப்பராம ஐயர் 377
Tirukkural.—M. Subbaramier.

3. பெற்றோர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் ஓர் விக்ஞாபனம் --B. S. ராமசுப்பையர். 383
An Appeal to Parents & Teachers —B. S. Ramasubbier

4. மீராபாய்—R. ஸ்ரீநிவாஸ ஐயர். 389
Meerabhai—R. Sreenivasa Iyer.

5. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தன். 393
Children's corner—Vasanthananda.

6. தியானக்கிரம விஷயம்—கே. யஸ். ராமசந்திர ஐயர். 398
Meditations from At the Feet of the Master. -K. S. Ramachandrier.


---

## பிரஹ்மக்ஞான ஸபை.

இது 1875 ஆ நவம்பர் மீ 17உ நியூயார்க்கு நகரில் உண்டாகி 1905 ஆ எப்ரல்மீ 3உ மதராஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இதின் நோக்கங்கள்:—

1. ஜாதி. மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வத்ர ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

3. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பலபிரபஞ்சசக்திகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதகமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

369

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1916௵ மார்ச்சு௴ ராக்ஷஸ௵ மாசி௴ { பகுதி 11.

## தற்கால நிலைமை.

### பெனரிஸ் ஹிந்து யூனிவர்சிடி.

1916-௵ பிப்ரவரி௴ 4உ யாகிய சுதினத்தில் வாரணாவஸீ யென்ற காசியம்பதியில் நடைபெற்ற மஹோற்சவத்துக் கீடான சம்பவம் இந்தியாவில் சென்ற சில வருஷங்களுக்குள் நடைபெறவில்லை யென்று சொல்லத் துணியலாம். அன்று நமது ராஜபிரதிநிதியும் தம்முடைய விவேகத்தினாலும் ராஜ தர்ம நைபுண்யத்தாலும் இந்தியர்களுக்கு எது நீதியோ அதைச் சரியான காலத்தில் கம்பீரமாகவும் எவருக்கும் பயமின்றியும் வற்புறுத்திச் சொல்லுவதாலும், இந்தியர்களுடைய அன்பையும் விசுவாசத்தையும் கொள்ளைகொண்டவருமான ஹார்டிங் பிரபுவால் பெனரிஸ் ஹிந்து சர்வ கலாசாலைக்கு மூலசிலா நிவேசனம் செய்யப்பட்டது.

லார்டு மெகாலே காலம் முதல் இந்தியாவில் பிரிடிஷ் ராஜாங்கத்தாரால் கலாசாலைகள் மூலமாகக் கற்பிக்கப்படும் வித்யையானது, மத விஷயத்துக்குப் புறம்பான ஐஹிக விஷயத்தைப் பற்றி மட்டும், சம்பந்தப்பட்டதாயிருந்தது. மேலும் சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் ஸ்தாபிக்கப் பெற்ற சர்வ கலாசாலைகளும் பேர் பெற்ற லண்டன்மா நகரத்து சர்வ கலாசாலையைப் போன்று ஸ்தாபிக்கப் பட்டனவாய், அவைகளைச் சேர்ந்த கல்லூரிகளில் கல்வி கற்ற மாணுக்கர்கள் குறிப்பிட்ட கலைகளிலும் ஆங்கில பாஷையிலும் இலக்கியத்திலும் போதுமான பயிற்சியுடையவர்களா என்று பரீக்ஷை வாயிலாக, தேர்ந்தெடுத்து அப்படித் தேறின மாணுக்கர்களுக்கு யோக்யதா பத்திரங்கள் அளித்து வருகின்றன. இந்த சர்வ கலாசாலைகளில் யோக்யதா பத்திரம் பெற்றவர்கள் பெரும்பாலும் மேனாட்டு நாகரிகங்களை மெச்சினவர்களாய், நமது பிராசீன நாகரிகத்தை இகழ்ந்தவர்களாய், மேனாட்டாருடைய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிகளாலும் நீராவி, மின்சாரம் இவைகளால் இயக்கப்பட்ட இயந்திரங்கள் முதலியவைகளாலும் மயங்கி, நாம் மேனாட்டாராகப் பிறக்காமல் இந்தியாவில் ஜனித்தோமே என்று முகத்தைக் கவிழ்த்தவர்களாய், நமது பிராசீன கிரந்தங்கள் யாவும் அறியாக் குழந்தைகளின் பிதற்றுதல்களாக எண்ணி, மேனாட்டு நாகரிகத்தைப் பேணினவர்களாயும், அந்நாட்டு நடை, உடை, பாவனைகளை அங்கீகரித்தவர்களாகவும், இருந்தார்கள்.

***

இவ்வாறு தன்னுடைய குழந்தைகளால் இகழப்பட்டு, மலினமடைந்து, சேர்கமுற்றிருந்த இந்தியாவாகிய நமது மாதாவைத் தேறுதல் செய்யவும், உத்தம குலத்தில் பிறந்து, அளவிறந்த செல்வத்துக்கு பாத்தியஸ்தராயிருந்தும், அதை யறியாமல் அயல்வீட்டாரிடம் ஆகாரத்துக்குக் கூடக் காத்திருக்கும் பிச்சைக்காரர் போலிருந்த, இந்தியர்களுக்கு ஸ்வபாவமாக ஏற்பட்டிருந்த செல்வத்தையும்

போக்யதையையும் எடுத்துரைக்க வந்தவர்போல் நமது பிரஹ்மஞான சபையின் தற்கால சபா நாயகரான அன்னிபெஸண்ட் அம்மையார் 1893-ம் வருஷத்தில் தூத்துக்குடியில் வந்திறங்கினர். அது முதல் இதுகாறும் அவ்வம்மையாரால் இந்தியாவின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட முயற்சிக்கும், பிரசுரிக்கப்பட்ட கிரந்தங்களுக்கும், செய்யப்பட்ட பிரசங்கங்களுக்கும், அளவு கிடையாது. அவைகள் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியதரமாக சகல இந்தியர்களாலும் நன்கு மதிக்கப்பட்ட முயற்சியானது, வாராணவஸியில் 1898 ஞு ஜூலை 7உயில் துவக்கப்பட்ட ஸேன்ட்ரல் ஹிந்து காலேஜின் ஸ்தாபனமேயாம்.

***

இதரப் பள்ளிக்கூடங்களில் பயின்றுவரும் வாலிபர்களைப்போல், இக்கல்லூரியிற்பயிலும் மாணுக்கர்களும் ஐஹிககசாஸ்திராராய்ச்சிலும் பாஷாஞானத்திலும் தேர்ச்சியடைந்ததோடு, மதவிஷயமான போதனையினுலும், இந்திய சரித்திரங்களிலும், இதிஹாஸ புராணுதிகளிலும் கொண்டாடப்பட்ட மஹான்களுடைய சரிதைகளை போதிப்பதினுலும், நமது இந்திய தேசாபிமானம் பொருந்தியவர்களாயும் ஏற்பட்டார்கள். மேலும் இக்கல்லூரியில் உபாத்யாயர்களாயும் அங்கத்தினராயும் அமைந்தோர்கள் சுயநயம் பாராட்டாமல், சம்பளத்தைக் கருதாமல் பரோபகாரத்தையும், இந்திய தேசாபிமானத்தையும் கருதி உழைத்து வந்ததால், மாணுக்கர்களும் அம்மாதிரியே பரோபகாரசிந்தை யுடையரானுர்கள். மேலும் சரீரம்தான் தர்மத்தை நடாத்த முதன்மையான கருவியாதலால் அதன் பயிற்சியும் முக்கியமெனக் கருதப்பட்டதால் இக்காலேஜ் மாணுக்கர்கள் அரோகதிடகாத்திரர்களானுர்கள். நல்லொழுக்க முறையும் கற்பிக்கப்பட்டமையால், இக்காலேஜ் மாணுக்கர்களுடைய உண்மையும் கௌரவமுங்கூடிய நடத்தையைப்பற்றி மெச்சாதார் இல்லை. இவ்விதமாக இந்த ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜின் பெருமையானது நாளுக்கு நாள் விருத்தியடைந்தது.

பிரயாகையில் ஸ்தாபிக்கப்பட்ட சர்வகலாசாலையை இந்த காலேஜூம் சார்ந்ததால் மதசம்பந்தத்தைத் தவிர இதர விஷயங்களில் அதன் பரிசிலனைக்குட்பட்டு இருந்தது. ஹிந்துகாலேஜ் என்றுமட்டும் இருந்தால் போதுமானதல்ல. நம் தாய்நாட்டில் முற்காலத்தில் அப்பியசிக்கப்பட்ட குருகுல வாசத்தின் தர்மத்தை முக்கிய அம்சமாகக் கொண்டதும், மதசம்பந்தமான ஞானத்தைப் புகட்டக்கூடியதும். விசேஷமாக இந்திய தேசாபிவிருத்தியையும், ஸ்வதேசாபிமானத்தையும், சாஸ்திர ஆராய்ச்சியையும், உண்டுபண்ணக்கூடியதும், அத்துடன் மேனாட்டு சாஸ்திர ஆராய்ச்சி, ஆங்கில பாஷாஞானம், இவைகளையும் கற்பிக்கக்கூடியதுமான, ஒரு ஹிந்து சர்வகலாசாலையை ஏற்படுத்தவேண்டும் என்ற சங்கல்பமானது நமது அம்மையாரின் மனதில் உதித்தது. அந்த சங்கல்பத்தைப் பத்திரிகை வாயிலாகவும் உபந்யாச ரூபமாகவும் வெளியிட, அதைச்சிலர் அங்கீகரித்தனர், சிலர் பரிகசித்தனர். இம்மாதிரி சிலகாலம் செல்ல, 1911ம் வருஷத்தில் "ஹிந்து யூனிவர்சிடி சொஸைடி" என்று ஒருசபை ஸ்தாபிக்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. அதில் நமது பிரஹ்மஞான சபைத் தலைவராகிய அம்மையாரும், சுதேச கைங்கர்ய துரந்தரரான மதன மோஹன மாளவய்யாவும், ஸநாதன தர்மத்தில் நல்ல சிரத்தாளுவான தர்பங்கா மஹாராஜாவும், முக்கியமான அங்கத்தினராக அமர்ந்தார்கள்.

***

ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியாகிய நமது அம்மையாரின் பிரேரணையின்மேல் அந்த காலேஜை ஹிந்து யூனிவர்சிடி சொஸைடியின் வசம் ஒப்புவிப்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

***

சர்வகலாசாலையை ஸ்தாபித்து யோக்கியதா பத்திரங்களும் விருதுகளும் அளித்தாலும் அவைகளை ராஜாங்கத்தார் ஒப்புக்கொண்டால் மாத்திரம் பயன்படுமாகையால்,

ஹிந்து யூனிவர்சிடிக்கு மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியாரின் சன்னது அல்லது பட்டயம்கிடைக்கும்! வண்ணம் ஏற்பாடு செய்யுமாறு நமது ராஜப்பிரதிநிதியை வேண்ட, நம்மிடம் பூர்ண கருணைகொண்ட ஹார்டிங் பிரபுவும் வித்தியா மந்திரியாயிருந்த, ஸர் ஹார்கோர்ட் பட்லரும், ஹிந்து யூனிவர்சிடி சொஸைடியாரின்வேண்டுகோளை அநுதாபத்தோடு கேட்டு, சீமையிலிருக்கும் இந்தியா மந்திரியோடு பிரஸ்தாபிக்க இணங்கினார்கள். அப்பால் ஹிந்து யூனிவர்சிடி விஷயமான விவரங்களைத் திட்டம்செய்ய, பலதடவைவித்யாமந்திரியும் தர்பங்கா மஹாராஜாவும் பண்டித மதனமோஹன மாளவய்யாவும் அடிக்கடி சந்தித்துத் தீர்மானம் செய்தார்கள். கவர்ன்மெண்டார் ஆதியில் அவசியம் வேண்டும் என்று சொன்ன 50லக்ஷம் ரூபாயும் தயார் செய்தார்கள். கடைசியில் 1915ம் ஹு அக்டோபர்மீ 1உயில் ஹிந்து யூனிவர்சிடி சட்டமும் இந்தியா சட்டநிரூபணசபையில் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது. அந்த தினம் நமது அம்மையாரின் பிறந்த நாளாகையால் அவரிடம் அபிமானமுள்ளவர்களனைவோராலும் விசேஷமாகப் பாராட்டப்பட்டது.

***

இந்தியர்களுடைய நியாயமான கோரிக்கைகளிலும், அபிவிருத்தியிலும் சதா அநுதாபத்தை யுடையவரும் ஹிந்து யூனிவர்சிடியை ஸ்தாபிப்பதில் முக்கியமாக சிரத்தை யெடுத்துக்கொண்டவருமாகிய லார்டு ஹார்டிங் பிரபுவே அந்த யூனிவர்சிடி கட்டிடத்துக்கு மூலசிலை ஸ்தாபனம் செய்யவேண்டுமென்று இந்தியர்கள் எல்லோரும் ஒருமித்து வேண்ட அதற்கு அப்பிரபுவும் இசைந்தார். அம் மஹோத்ஸவம் 1916ஹு பிப்ரவரிமீ 4உ நடப்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

***

ஹிந்து யூனிவர்சிடிக்காக இந்தியாவிலுள்ள சுதேச ராஜாங்கத்தாராலும் பிரபுக்களாலும் மற்றவர்களாலும்

ஏராளமான பொருளுதவி செய்யப்பட்டு தற்காலம் ஒரு கோடி ரூபாய் வரை திரவியம் சேர்ந்திருக்கின்றது. காசிக்கு சமீபத்தில் நாகவாஎன்ற இடத்தில் 1200 ஏகரா விஸ்தீர்ணமுள்ள காலியிடம் சம்பாதிக்கப்பட் டிருக்கிறது. இந்தியாவின் பற்பல மாகாணங்களிலிருந்தும் இம்மகோத்ஸவத்திற்காக அழைக்கப்பட்டிருந்த கொற்றவர்கள் மற்றவர்கள், பிரபுக்கள், வித்வான்கள், பிரக்யாதிபெற்ற இந்தியர்கள், ஆங்கிலேயர்கள், பற்பல கலாசாலைகளின் மாணாக்கர்கள் இவர்களால் முற்றிலும் நிரம்பப்பட்ட அம்மகா மண்டபமானது ஒரு பெரும் சமுத்திரம் போலிருந்தது. மத்தியில் மூலசிலா நிவேசனத்துக்காக ஒரு இடத்தைக் காலியாகவும் வெளியாகவும் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் ராஜப்பிரதிநிதியவர்கள் பிரதிஷ்டை செய்யும் காட்சியை அம்மண்டபத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொருவரும் ஒருங்கே காணும்படி அம்மண்டபமானது மிக அழகாக அமைக்கப்பெற்றிருந்தது.

***

ஸரஸ்வதீநிலயமாயும், ஹிந்து வாலிபர்களைக் காந்தக் கல்லைப்போல் கவரவல்லதாய் இருக்கப்போவதும், 5000 வருஷங்களுக்கு மேற்பட்டகாலமாய் ஸநாதநதர்மத்துக்கும், வைதிகவித்யைக்கும் சாஸ்திரப் பயிற்சிக்கும் இருப்பிடமாகிய காசியப்பதியில் ஸ்தாபிக்கப் படுவதுமாகிய ஹிந்து யூனிவர்சிடியின் பிரதிஷ்டையானது சாமான்யமானதா? அந்த ஸ்தலத்தைப் பரிசுத்தப்படுத்தி ஸரஸ்வதீதேவியின் நிரந்தர வாசத்துக்கு யோக்கியமாய்ச் செய்யும்பொருட்டு, அவ்விடத்தில் ஒரு மஹாயக்ஞமும், 24லக்ஷம் காயத்திரீஜபமும் பிராஹ்மணோத்தமர்களால் நடத்தப்பட்டன.

***

இவ்வண்ணம் பாவனம் செய்யப்பட்ட ஸ்தலத்தில் மேற்கூறிய 4-ம் தேதி பன்னிரண்டு மணியடிக்கவும் "ஹார்டிங் பிரபு மண்டபத்தில் விஜயம் செய்தார். சைனயங்

களும் ஆயுதங்களை சமர்ப்பித்து வந்தனம் செய்தன. "நாஷனல் ஆந்தம்" கோஷிக்கப்பட்டது. மத்தியிலிருந்த மேடையின் மீது மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதி அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் வலதுகைப் புறத்தில் காச்மீர, ஜோட்பூர், பிக்கானீர், கோடா, இடார், கிஷன்கர் ஆல்வார், பெனரிஸ் மன்னர் முதலானோர் மங்களகரமாக வீற்றிருந்தார்கள். இடதுகைப் பக்கத்தில் வங்காள கவர்னர், பஞ்சாப் லப்டினண்டு கவர்னர், ஸர் எட்வர்டுகேட் தற்கால வித்யா மந்திரியான ஸர் சங்கரன் நாயர், தர்பங்காமகாராஜா, பண்டித மதனமோஹன மாளவய்யா, முதலியபலர்கள் ஆசன மலங்கரித்தார்கள். அந்த மகா சபையில் ஹிந்து யூனிவர்சிடி சொஸைட்டியாரின் அக்கிராஸநபதியான தர்பங்கா மகாராஜாவால் சொஸைட்டியாரின் வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டது. செண்ட்ரல் ஹிந்து காலேஜை ஆக்கியோரும், சொஸைடிக்கு அளித்தோருமான நமது அம்மையாருக்கு வந்தனமளிக்கப்பட்டது. அதன் பின்னர் அதை ஒரு அழகிய வெள்ளிப்பெட்டியில் வைத்து ஹார்டிங் பிரபுவிடம் கொடுக்கப்பட்டது. அதை அங்கீகரித்து, மண்டபத்தில் வீற்றிருந்த சகலராலும் செவ்வனே கேட்கும்படி கம்பீரமான உத்தரம் அளித்தார். அம் மானவேந்திரன் அவ்வுத்தரம் முற்றிலும் இந்தியர் நோக்கங்களுக்கு இணங்கிய வண்ணம், தருணத்துக்குத் தக்கவாறு காருண்யத்தால் நிரம்பியிருந்ததால் அடிக்கடி கரகோஷங்களோடு சமாஜத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விதம் பேசி முடிந்த பின்னர் மூலசிலாப் பிரதிஷ்டைசெய்யப்பட்டதைச் சகலருங்கண்டு பேரானந்தமடைந்தார்கள். அதன் பின்னர் பிக்கானீர் மகாராஜா அவர்கள் ராஜப் பிரதிநிதிக்கு உபசார வார்த்தை சொல்ல, ஜோட்பூர் மகாராஜா அவர்கள் ஹார்டிங் பிரபுவின் கழுத்தில் ஹாரமிட்டார். இவ்வாறு வெகு விமர்சையாய் யாதொரு குற்றம் குறையின்றி மஹோத்ஸவம் முற்றுப் பெற்றது.

ஹார்டிங் பிரபுவால் அடியில்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது. "இந்தியாவில் இதுவரை ஏற்பட்டிருக்கும் சர்வகலாசாலைகள் போதாமலிருப்பதால் கல்வி கற்கவேண்டும் என்ற அவா மிகுந்தவராக அநேகம் வாலிபர்கள் ஆவலைத் திருப்தி செய்யமாட்டாமல் தத்தளிப்பாயிருக்கிறது. ஆகையால் புதிது புதிதாய் சர்வகலாசாலைகள் நாடெங்கும் தோன்றுவது சுபசூசகமே. இதர யூனிவர்சிடிகளில் கற்பிக்கும் வித்யையைக் காட்டிலும் ஹிந்து யூனிவர்சிடியில் கொடுக்கப் போகும் பயிற்சி குறைவில்லாமல் மட்டு மிருப்பதோடு கூட, தற்காலத்தில் இந்திய யூனிவர்சிடிகளில் பற்பல கலைகளில் போதுமான உயர்தரப் படிப்பில்லாததால் உயர்ந்த விருதுகளைப் பெறுவதற்காக மேனுட்டு யூனிவர்சிடிகளுக்குப் போகும்படி நேரிடுவதால், அம்மாதிரி இனி யேற்படாவண்ணம் இந்தியாவிலே சகல கலைகளிலும் அவ்வளவு உயர்வான படிப்பை ஹிந்து யூனிவர்சிடியில் கற்பிக்கவேண்டும் என்ற தீர்மானம் யூனிவர்சிடி அதிகாரிகளால் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதி சீக்கிரம் நிறைவேறும் என நம்புகிறேன். ஆதிகாலத்தில் எவ்வாறு மாணுக்கர்கள் குருகுலவாசம் செய்து, குருவின் ஆசிரமத்தில் அவரால் அன்புடன் தம் குழந்தைகள் போல் காக்கப்பட்டு அவரால் தத்வோபதேசம் பெற்று புத்தியிலும் குணத்திலும் நன்னெறியிலும் மிக்க லாபமடைந்தார்களோ, அவ்வாறு இந்த ஹிந்து யூனிவர்சிடியிலும் மாணுக்கர்கள் பலன் பெறுவார்கள். இதர யூனிவர்சிடிகளுக்கும் ஹிந்து யூனிவர்சிடிக்குமுள்ள மற்ற வித்தியாசம் என்னவெனில் இதில் மதவிஷயமான வித்யையையும் கற்பிக்கப் போவது தான். ஆனால் சிலர் ஹிந்து மதத்தை போதிப்பதற்கு ஒரு யூனிவர்சிடியும் மகம்மதிய மதத்தைப் போதிக்க மற்றொன்றும் உண்டாக்குவதால் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் வேற்றுமை அதிகப்படும் என்று சங்கிக்கும் மாதிரி, பீதியடைய யாதொரு காரணமும் இல்லை. சிப்பன்

பீரபு காலத்தில் நியமிக்கப்பட்ட வித்யா இலாகாக் கமிஷனரால் அவரவர் மதங்களை அம்மதத்தாருக்கு கல்லூரிகளில் கற்பிப்பது சிலாக்யமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. ஒருவனுக்குத் தன் மதத்தில் உண்மையான பக்தியும் சிரத்தையும் உண்டானால், அவன் மற்றவர் மதத்திலும் கௌரவத்தை வைப்பான். மத சம்பந்தமான வித்யையைப் புகட்டாத படிப்பு மிகப் பயனற்றதாகும். இந்த அபிப்பிராயத்தை நான் பற்பல தேசங்களில் சஞ்சரித்த அநுபவத்தின் மேல் நான் கொண்டேன்.

***

ஹிந்து சர்வகலாசாலையில் விருது பெற்று வரும் மாணாக்கர்கள், மேனாட்டுக் கலை, சிற்பம், நாகரிகம் இவைகளிலும், ஹிந்துக்களுடைய பிராசீன நாகரிகத்திலும், சரித்திரம், சாஸ்திரம், ஆத்யாத்மிக ஞானம், தத்வசாஸ்திரம் இவைகளிலும் தேர்ந்தவராய், இந்தியாவை மேன்மேலும் விருத்திக்கு கொண்டுவரக் கூடியவராயிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். இதுவரை இதற்காக உழைத்து வந்த தர்பங்கா மஹாராஜா பண்டித மாளவய்யா, பண்டித சுந்தரலாலா, ஸர்ஹார் கோர்ட் பட்லர் இவர்களுக்கு இந்தியர் நன்றி பாராட்டற்பாலது. இது காறும் பொருளுதவி புரிந்தவர்கள் இனிமேலும் வேண்டிய மட்டும் தனமளித்து மகோன்னத தசையை யடையும்படி செய்யவேண்டிய தவசியம். இதுகாறும் பெரும் முயற்சி யெடுத்துக் கொண்டவர்கள் இனி கைதளராமல் இந்த யூனிவர்சிடியில் வியவசாயம், வியாபாரம், வைத்தியம் முதலான கலைகளிலும், உலகத்தாரால், நன்கு மதிக்கக் கூடிய விருதுகளை அளிப்பதற்காக உயர்தர வித்யையைப் புகட்ட, கல்லூரிகளை ஸ்தாபிக்கவேண்டும். ஜோட்பூர் மகாராஜா அவர்கள் ஏற்கனவே கொடுத்திருக்கிற மூலதனத்தைத் தவிர இப்போது வருஷம் ஒன்றுக்கு 24,000 ரூபாயாகக் கொடுத்து வருவ

தாக வாக்களித்திருக்கிறார். அதைக்கொண்டு "ஹார்டிங் தொழில் சாஸ்திர பீடம்" ஒன்று என்பெயரால் ஸ்தாபிக்கு மாறு கோரினபடி நான் மனமுவந்து இணங்குகிறேன். இன்று ஸ்தாபிக்கப்பெறும் சிலையானது இந்தியாவின் ஞானத்தையும் விக்ஞானத்தையும் விருத்திக்குக் கொண்டு வரக்கூடிய ஸத்காரியங்களுக்கு வித்தாகவும்; இந்தியர்களுக்கு சதா மங்களத்தைச் செய்யக் கூடியதாயும், பகவத் குணங்களுடைய மகிமையைத் துலக்கும் ஒரு விளக்காகவும் நீடூழி காலம் விளங்கவேண்டும் என்று நான் எல்லாம் வல்ல இறைவனைத் துதிக்கிறேன்."

***

இம்மகோற்சவத்துக்குப் பூர்வாங்கமாக யக்ஞமும்ஜபமும் அமைய, உத்தராங்கமாக பல சங்கீதக்கச்சேரிகளும் க்யாதி பெற்ற வித்வான்களால் உபந்யாசங்களும், சரீர அப்பியாசம் முக்கியமெனக் காட்டுவதற்காக "கிரிகட்" என்ற எறிபந்து விளையாட்டுக் கட்சிகளும் நடைபெற்றன.

***

பிப்ரவரி மீ 5உ காலையில் பிக்கானீர் மகாராஜா அக்கிராசனம் வகிக்க, மகாராஜாக்களும் வித்யையிற் கரை கண்டவர்களும் மகா சபையாய் கூடியிருந்தார்கள். அக்கிராசனபதி பின் வருமாறு சொல்லி முடித்தார். "இந்தியாவில் பண்டைக் காலத்தில் கைத்தொழில்களும் பிரதேச வர்த்தகமும் அதிகமாயிருந்தால் பிற நாடுகளில் இந்தியாவின் பெருமை பரவியிருந்தது. இக்காலத்திலவை குன்றியிருத்தலால் அவைகளை விருத்திக்குக் கொண்டுவரவேண்டியது நமது கடமை. ஒற்றுமையாலடையப் பெறும் பெரும் பலனை நாம் அறிந்து விபவசாய ஐக்கிய சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். "வர்த்தக வியாபார சாஸ்திர பீடம்" ஒன்று ஹிந்து யூனிவர்சிடியில் ஏற்படுத்தவேண்டும்." ராய் சண்டிகா பிரசாத சாஹேப் அவர்கள் "டென்மார்க்கு தேசத்தில் இருக்கும் வியவசாய ஐக்கிய சங்கங்கள் போல இந்

தியாவிலும் ஸ்தாபிக்கவேண்டிய தவசியம்" என்று நிரூபித்தார்கள். பிறகு பிரன்சிபல் சி. எச். வோரா. என்பார் "தொழில் சாஸ்திர பீடங்களின் ஆவசியகத்தை" விளக்கினார்.

***

அன்று மாலையில் புரொபஸர் ஹிக்கின் பாதம் "இந்திய வியவசாயத்தை லாபகாமாக்கும் விதத்தையும், சனம் லாலுபாய் சாமல்தாஸ் "வியாபாரமும் வியாபார சாஸ்திரமும்" என்னும் விஷயத்தையும் பற்றி உபந்யாசம் செய்தார்கள்.

***

புற்பூண்டுகளுக்கும் மிருகம் மனிதர்போல் உயிரும் ஆத்மாவும் உண்டு, அவைகளுக்கும் உணர்ச்சி, சந்தோஷம், சோகம், மோஹம், தாபம், பசி, மரணம் இவைகளும் உண்டு, என்று நம் முன்னோர்கள் சொல்லியிருப்பது வாஸ்தவம் என்று தம்மால் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட யந்திரத்தால் எல்லாரும் கண்ணால் பார்க்கும்படி நிரூபித்தவரும், அதை மேனாட்டு ஜீவதத்வ சாஸ்திரிகள் சபைகளில் அவர்கள் சந்தேகமற நிரூபித்ததால் தனக்கும் தன் மாதிரு பூமிக்கும் பெருமையை உண்டுபண்ணினவரும், ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் திக்விஜயம் செய்ததுபோல், ஆங்காங்குள்ள சாஸ்திர சமாஜங்களில் தன்னுடைய அதிநுபட்பமான மாறுதல்களையும் அறியக்கூடிய யந்திரத்தைக் காண்பித்துப் பிரசங்கித்ததும், வியப்புடன் கூடிய அவர்களால் மரியாதை செய்யப்பட்டு இந்தியாவுக்கு வந்ததும் அப்பால் இந்தியா கவர்ண்மெண்டாரால் கொண்டாடப்பட்ட வருமாகிய, ஸ்ரீமான் ஜகதீச சந்திர போஸ் சபையின்முன்னர் 7-ம் தேதி காலையில் பிரசங்கிக்க எழுந்தவுடன். சபையோரனைவரும் அவர் பால் தாம் வைத்த பெருமையையும் அன்பையும் கரகோஷத்தால் வெளியிட்டனர். அவர் உபந்யாசம் பின்வருமாறு:—"நம்முடைய தேசமானது கடை பிணம் போலில்லாமல், உண்மையாகவே உலகத்தாரால் உயிருடனிருப்பதாகக் கருதப்பட்டு நன்கு மதிக்

கப்படவேண்டுமானல், இதர தேசத்தாரால் வெளியாகும் தத்வங்களை கிரஹித்தால் மட்டும் போதாது. இந்தியர்கள் தாங்களாகவே முயன்று தங்களால் கண்டுபிடிக்கப் பட்ட உண்மைகளை லோகோபகாரார்த்தம் த்யாகம் செய்தல் வேண்டும். புதிதாக உண்மைகளையறிவதற்கு சாதனங்கள் இரண்டு வேண்டும். பலமான கற்பனு சக்தியும், கற்பனு சக்தியால் ஊஹிக்கப் பட்டது வாஸ்தவம் தானு என்று பௌதிக யந்திரங்களால் பரிசோதித்தலும் வேண்டும். நம்மிடம் முற்கூறியது அதிகமாயிருந்தாலும் பிற் கூறியது குறைந்திருக்கின்றது. ஆகையால் தான் நாம் மேனுட்டாரைப் போல் பௌதிக சாஸ்திர வாராய்ச்சியில் முன்னுக்கு வரவில்லை. தத்வ சாஸ்திரியானவன் சரீரத்தை யடக்கி இந்திரிய நிக்ரஹம் செய்து, மனதை ஒருமைப்படுத்தி, சரீர சுகததை நாடாமல் ஜயாபஜபததை லக்ஷ்யம் செய்யாமல், லாபா லாபத்தை ஒன்ருகப் பார்த்து உண்மையைக் கண்டு பிடிப்பதையே குறியாய்க் கொள்ள வேண்டும். இப்படி சம்பாதிக்கும் ஞானத்தின் பயன் என்ன? மேனுட்டார் சுய நயத்தையும் தன் பெருமைக்காக அபரிமிதமான சக்தியையும் கருதியதால் சாஸ்திர ஞானமானது லோக ஹிதத்துக்காக உபயோகப்படாமல் நாசத்துக்கு ஹேதுவாயிற்று. ஆனுலிந்தியாவிலோ, இந்திரிய நிக்ரஹமும் வைராக்யமும் ஸ்வபாவமாகவே அதிகமாயிருக்கின்றது. சிறந்த வீரனுயிருந்து ஸிம்ஹாஸன மேறிய 9 வருஷங்களுக்குள் பல யுத்தங்கள் புரிந்து அவைகளில் வெற்றியடைந்து தன் ராஜ்யத்தை விருத்தி பண்ணின அசோகமஹாராஜாவுக்கு திடீரென்று வைராக்யம் தோன்றி, ஜயத்திலும் கீர்த்தியிலும் வெறுப்புண்டாயிற்று. இந்தியர்கள் ஸ்வபாவமிது. ஒரு அரசனுக்கே இந்த வைராக்கியமுண்டானுல் ஞானத்தை விருத்தி பண்ணவே வாழ்நாளைத் தத்தம் செய்த ஒரு தத்வ சாஸ்திரி அற்பமான சுயலாபத்தைத் தேடுவது தகுமா, மேனுட்டில் தத்வ சாஸ்திரத்தை மிகவும் சிறு சிறு பாகங்களாய்ப் பிரித்து ஒவ்வொருவர் ஒவ்வொரு பாகத்தை மட்டும் கவனிப்பதால் அவர்கள் மன

தில் ஏகத்வம் தோன்றுது. நம்முடைய இயற்கையாலும் பழக்கத்தாலும் ஏகத்துவத்தை மனதால் பார்ப்பதோடு பௌதிக சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளும்படி நிரூபிக்கவும் இந்தியர்களால் முடியும். அந்தப் பெருமை நமக்குத்தான் வாய்க்கும் என்று நம்புகிறேன். சாஸ்திரங்கள் பலவும் ஒன்றுக்கொன்று சம்பந்த மற்றவைகள் அல்ல. ஓரே உண்மையான சாஸ்திரத்தின் பாகங்கள் அல்லவா?

***

போஸ் பேசிமுடித்ததும் டாக்டர் பி. சி. ரே என்பார் அடியிற்கண்டபடி உபந்யசித்தார். சரித்திரத்துக்கெட்டாதநாள்முதல் காசிமாநகரத்தின் பெருமை ஓங்கி விளங்கி வருகின்றது. ராஜாங்கங்கள் மாறினும் காசியின் பெருமை குறையவில்லை. வைத்தியர்கள் சஸ்திரம் பிரயோகிக்கத் தொடங்கியது இந்நகரில். "எரிகாரம்" எவ்வாறு தயார் செய்வதென்று மிகவும் சம்பூர்ணமான விவரத்தோடு ஸுச்ருததந்திரத்தில் சொல்லிய வண்ணம் முதலில் தயார் செய்தது இந்நகரில். கியாதிபெற்ற ராஜா ஜயசிங்கால் நிர்மாணம் செய்யப்பட்டு, இன்னும் உலகத்தாருக்கு வியப்பை யுண்டுபண்ணும் நக்ஷத்திரகாட்சிசாலையும் இந்நகரிலேயே ஏற்பட்டது. இந்நகரில் தாபிக்கப்படும் யூனிவர்சிடியில் ஹிந்துக்களைத்தவிர மற்றவரும் கல்வி கற்கலாமென்று கேட்க சந்தோஷமடைந்தேன். முன் காலத்தில் அலக்ஸாண்டிரியாவில் இந்துக்களும் மகம்மதியர்களும் சந்தித்ததாலும் இந்நகரில் மகம்மதியர் வந்து கற்ற வித்தையை ஐரோப்பாவில் கொண்டுபோய் பரவும்படி செய்ததாலும் ஐரோப்பியர்கள் ஞானம் அதிகரித்தது. அதற்கு பதிலாக வட்டியும் முதலுமாக நாம் தற்காலத்தில் அவர்களிடமிருந்து விஷயஞானத்தைப் பெறுகிறோம். கி. பி. 12-வது நூற்றுண்டில் ஜனித்த பாஸ்கரர் கணிதத்திலும் வானசாஸ்திரத்திலும் பேர்பெற்றவர். அவருக்குப் பிற்காலம் இந்தியாவில் வானசாஸ்திரத்தில் ஒருவரும் கவனம் செலுத்தாமல் ஜோதிட சாஸ்திரத்தையே பயின்றுர்கள். தற்காலத்

தில் ஆசியாமுழுவதும் ஒரு கிளர்ச்சி உண்டாயிருக்கின்றது. நம்முடைய முற்காலப் பெருமையைப் போற்றினால் போதாது. வராஹமிஹிரர் மாதிரி நாம் கற்க வேண்டிய ஞானம் எவ்விடமிருந்து வந்தாலும் அதை கிரஹித்து, அதற்கு மேலாராய்ச்சி செய்யவேண்டும். அப்பால் டாக்டர் ஹரோல்மோன் என்பவர் வியவசாய சாஸ்திரத்தை நவீன யூனிவர்சிடிகளில் கற்பித்தலவசியம் என்று பிரசங்கித்தார்.

***

அன்று மாலையில் ஸ்ரீமான் சுந்தியென்பார் மாணாக்கர்களுக்கு புத்திமதி கூறினர். பின்னர் மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் "சர்வ கலாசாலையில் ஸத்குணப் பயிற்சி"யைப் பற்றி நன்கு பிரசங்கித்தார். "இதர யூனிவர்சிடிகளில் போல் இந்து யூனிவர்சிடியில் திரவிய லாபத்தை யுத்தேசித்துக் கற்பிப்பது தகாது. இதற்கு ஹிந்து மதத்திலோ நிஷ்காமமாய் கர்மம் செய்யவேண்டும் என்றும், ஆத்மாவானது மனதுக்கு மேற்பட்ட வஸ்துவென்றும், அது பரமாத்மாவின் அம்சமென்றும், ஒருவனுக்கு கிடைத்திருக்கும் ஞானம் அவனுக்குச் சொந்தமானதல்ல. உலகத்தாரின் பிரயோஜனத்துக்காக அவனிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் பொருள் என்றும் ஹிந்து மதத்தில் போதிக்கப்படுகிறது. ஆகையால் ஹிந்து யூனிவர்சிடி மாணாக்கர்கள் ஸ்வதேசாபிமானிகளாய் பரோபகார துரந்தரர்களாய், இந்திரிய நிக்கிரஹ முடையவராயிருத்தல் வேண்டும் என்று சொன்னர்.

***

7-ம் தேதி காலையில் சென்னை ராஜதானியிற் பிறந்து சர்க்காரில் உயர்தர சம்பளமுள்ள உத்தியோகத்திலிருந்து கல்கத்தா யூனிவர்சிடியில் பௌதிக சாஸ்திராராய்ச்சிக்காக உழைப்பதற்காக அந்த உத்யோகத்தை விட்டு மாதிரு பூமிக்காக கைங்கர்யம் செய்துவரும் சி. வி. ராமன்

"கணித சாஸ்திரத்"தைப் பற்றியும், லப்டினனண்ட் கர்னல் பட்டம் பெற்ற கீர்த்திகார் என்றவர் சென்ற நூற்றாண்டில் வைத்திய சாஸ்திரத்தின் அபிவிருத்தியைப் பற்றியும் உபந்யசித்தார்கள். அன்று மாலையில் அக்கிராசனம் வகித்த ஆல்வார் மஹாராஜா ஹிந்தி பாஷையில் மிகவும் நவீனமாய், எல்லாரும் மெச்சும்படி பேசி 5 வருஷகாலத்துக்கு வருஷத்துக்கு ரூ 12,000 வீதம் ஹிந்து யூனிவர்சிடிக்குக் கொடுத்து வருவதாக வாக்களித்தார். அதைக்கொண்டு "ஸம்ஸ்கிருத பாஷாபீடம்" ஸ்தாபிக்கவேண்டும் என்று சொன்னார். "ஸம்ஸ்கிருத க்ரந்தங்களின் உயர்வை"ப் பற்றி மஹாமஹோபாத்யாய பண்டித ஹரப்பிரஸாத் சாஸ்திரியும் "இந்தியர்களின் மநப்பண்பைப்" (Indian culture) பற்றி கிருஷ்ண ஜோஷியும் பிரசங்கித்தார்கள்.

*
* *

8௳ காலையில் புரொபஸர் கெடிஸ் என்பவர் "நவீன சர்வ கலாசாலைகளின் மேல்நோக்கங்களை"ப்பற்றி மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். "ஸம்ஸ்கிருதக்கல்வி"யைப்பற்றி எஸ். எஸ். மேதாவும், "இந்திய சங்கீதத்"தைப்பற்றி பாத்கண்டே யென்பவரும் வியாசங்கள் படித்தார்கள். புனா நகரத்திலிருக்கும் "விதவா கிருஹத்துக்கு" அத்யக்ஷரும் எம். ஏ. விருது பெற்றவருமான மிஸ். தாகூர் அம்மாள் "ஹிந்து யூனிவர்சிடியில் ஸ்திரீகளுக்கும் கல்வி கற்பிக்கவேண்டும்" என்று வற்புறுத்தினார். மறுபடியும் சி. வி. ராமன் "சங்கீத சம்பந்தமான பௌதிக சாஸ்திரத்தின் நுட்பங்களைப் பற்றி உபந்யசித்தார். அப்பால் பண்டித மாளவய்யா அவர்கள் ஹிந்தியில் மாணாக்கர்களுக்கு புத்திமதி கூறினார். '4 கோடிரூபா யின்னும் யூனிவர்சிடிக்கு தேவை யிருப்பதாயும், அதையும் ஹிந்து தனவான்கள் கொடுத்துவர வேண்டுமென்றும் பெரியோருக்கு விண்ணப்பம் செய்தார். அதன் பிறகு பேர்பெற்ற ராமசக்ரபாவாவினால் ஹரி சங்கீர்த்தனமும் அதன் பின்னர் புரொபஸர் விஷ்ணு திகம்பர் என்ற வித்வானாலும் அவர் சிஷ்யர்களாலும் ஒரு சங்கீதக் கச்சேரியும் நடந்தன.

8வ வஸந்த பஞ்சமீ புண்ய தினத்தில், மத்தியானத்தில் யக்ஞமும் சமாப்தியடைந்தது. சமாப்தி சரஸ்வதீ பூஜை வெகு விமர்சையாய்ச் செய்யப்பட்டது. அது நடந்த பின்னர் சீக்க மதத்தைப் பற்றி பிரசங்கங்களும் செய்யப்பட்டன. அவர்கள் முக்கிய கிரந்தமான "கிரந்த சாஹேப்"பிலிருந்து சில பாகங்கள் வாசிக்கப்பெற்றன. பண்டித மாளவய்யா கவர்ன்மெண்டாருக்கு வந்தனமும் நன்றியறிதலும் கூறினர். இங்ஙனம் யாதொரு குறையுமின்றி மங்களகரமாக ஹிந்து யூனிவர்சிடி மூலசிலாப் பிரதிஷ்டா மஹோற்சவம் முற்றுப் பெற்றது.

* * *

ஹிந்து யூனிவர்சிடியின் ஜீவதசையை ஒரு நாடகமாக பாவிப்போமானால், 4உக்கு முன்னும் பின்னுமாக நடைபெற்ற அங்கங்களையுடைய பிரதிஷ்டா மஹோத்ஸவத்தை அந்நாடகத்துக்கு நாந்தீ சுலோகமாகச் சொல்லலாம். எவ்வாறு நாடகத்தின் துவக்கத்தில் கடவுள் வாழ்த்தாகவும் மங்கள சுலோகமாகவும் நாந்தியானது ஏற்பட்டு அதிலேயே இனி நடைபெறப்போகும் நாடகத்தின் முக்கியாம்சங்கள் சூசிக்கப்படும் என்று அலங்கார சாஸ்திர நிபுணர்களால் சொல்லப்படுகிறதோ, அவ்வாறு மேற்கூறிய மஹோத்ஸவத்திலும் ஹிந்து யூனிவர்சிடியில் இனிமேல் நடக்கப்போகிற ஒவ்வொரு அபிவிருத்திக்கும் அறிகுறியாக மேற்கூறிய சகல விஷயங்களும் நடந்தனவாகக் கொள்ளலாம். இம்மஹோத்ஸவம் எங்ஙனம் அமைதியாயும் மங்களகரமாயும் நடந்ததோ அதேமாதிரி யூனிவர்சிடியும் யாதொருவிக்கினமுமின்றி நடக்கவேண்டுமென்று நாம் சர்வநியாமகரான ஈசுவரனையும் அவராக்ஞையை நிறைவேற்றும் வண்ணம் லோகோபகாரத்தின் பொருட்டு பத்தகங்கணர்களாய் உழைத்துவரும் மஹரிஷிகளையும் பிரார்த்திக்கிறோம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

385

# திருக்குறளாராய்ச்சி.

இவ்வுலகத்தின்கண் மானிடராய் ஜனித்தவர்கள் ஒவ்வொருவரும் தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் அதாவது- அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் அடைய முயலவேண்டுவது முக்கியம். மானிட ஜன்மத்தை எடுத்ததின் பயன் அதுவே யாகும். இந்நாற் பொருளையும் விளக்கும் நூற்கள் பல வற்றுள், உலகத்தாருக்கு இல்லறத் துறவற தர்மங்களை நடத்திக் காட்டுவதற்கே அவதரித்தவரும், பிரஹ்மாவின் அவதாரமெனக் கொள்ளப்பட்ட வருமாகிய திருவள்ளுவ நாயனார் செய்திருக்கும் நூலாகிய திருக்குறளை ஐந்தாம் வேதமென ஆன்றோர் கூறுவர். ஆயினும் கல்விமான்களிற் சிலர் அந்நூலில் அறம், பொருள், இன்பமென்னும் முப் பொருள்கள் மட்டுந்தான் விளக்கப் பட்டிருக்கின்றன வென்றும், வேறு சிலர் அதில் நான்காவதாகிய வீட்டுப் பேற்றையும் உணர்த்தப் பட்டிருக்கின்றதெனவும் கூறுகின்றனர். இவ்வித மாறுபாடான எண்ணத்துக்குக் காரணம், மற்ற மூன்றையும் போன்று வீட்டுப் பேற்றை வெளிப்படையாகக் கூறுது, ஆழ்ந்து உற்றுணருமாறு, உள்ளடக்கி கடவுள் வாழ்த்து முதலிய அதிகாரங்களாகப் பாயிரத்தில் தொடுத்து விடப்பட்டிருப்பதே. முதலில் அந்நூலைக்கற்குமொருவன் பாயிரத்தைப் பயிலுங்கால் அதைச் சாதாரண கடவுள் வாழ்த் தாகக் கொள்வானே யல்லாது வேறு விதமாக மதியான். இதர நூல்களையும் கற்று ஆராய்ந்த பின் தான் பாயிரத்தில் கூறப்பட்டுள்ள கடவுள் வாழ்த்தின் அருமையை அறியமுடியும்.

அக்கடவுள் வாழ்த்து சர்வசமயத்தாரானும் ஏற்றுக் கொள்ளப்படுமாறு பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அதனாலேயே நாயனார் சமயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர் அல்லரென்றும் சமயாதீதப் பரம் பொருளிடமே பக்தியுள்ளவரென்றும் நினைக்க இடமுண்டாகிறது.

இனி அவர் கூறியுள்ள விஷயத்தை ஆராய்வாம்.

சாஸ்திர ஆராய்ச்சியில் பயில்வார், இவ்வுலக சிருஷ்டி பேதங்களைக் கவனிக்குமிடத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும், இவ்வுலகம் ஏது? எங்கிருந்து வந்தது? இதற்கு கர்த்தா அதாவது இதை சிருஷ்டித்தவர் யாவர்? நாம் யார்? என்னும் இவ்வித ஐபவினாக்கள் உண்டாகக் கூடியது சகஜம். அவைகளுக்கு விடையாக,

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி பகவன் முதற்றே யுலகு" என்னும் முதற்குறட் பாவைக் கூறினார் போலும், எவ்விதமெனில்:—

எழுத்துக்களுக்கு ஆதியாயுள்ளது அகாம், அதுபோல் உலகத்துக்கு ஆதியாயுள்ளவர் கடவுள் என்றார். உயிரெழுத்துப் பன்னிரண்டு, மெய்யெழுத்துப் பதினெட்டு, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு ஆகிய இவ் எழுத்துக்களில் "அ" என்னும் அக்ஷரமே முதல் என்பது நாம் அரிச்சுவடி பயில ஆரம்பிக்கும்போதே நமக்குப்போதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் எழுத்துக்களுக்கு ஆதியாயுள்ள 'அ' என்னும் அக்ஷரத்தை நாம் கண்ணால் பார்க்கிறோமே அதுபோல உலகத்துக்கு ஆதியாகச் சொல்லப்பட்ட கடவுளை நேரில் காணக் கூடவில்லையே என்பதான சங்கை ஏற்படுகிறது.

அஃதுண்மையே. எழுத்துக் களுக்கு ஆதிகாரணமெனச் சொல்லப்பட்ட அகரம் என்பது யாது என்று யோசிப்போமாயின், அ. என்று பல கோணல்களுள்ளதாக எழுதப்படும் இவ்வடையாளத்தையன்று எனத்தெரிகிறது.

எப்படியெனில், எழுத்துக்கு வடமொழியில் அக்ஷரம் என்று பெயர். அக்ஷரம் என்றால் அழிவில்லாதது எனப்பொருள். அதை நோக்கும்போது இவ்விதக் கோணல்களுள்ள 'அ' என்னும் எழுத்து அழியாததா? எழுதினதை அழித்துவிட்டால் அழிந்து போகிறதே? அப்படியிருக்க அதை அழிவில்லாததென்பது எங்ஙனம்? இதனால், அ என்று கூறியுள்ளது அழியக்கூடியதாகிய இந்த கோணல் எழுத்தையன்று என ஏற்படுகிறது.

எழுத்துக்கள் இரண்டு விதம். ஒன்று வரிவடிவு, மற்றொன்று ஒலி வடிவு, ஒலிவடிவாகிய எழுத்தைக்கட்புலன் அறியமாட்டாதாகையால் அப்புலனுக் கேற்க வரிவடி வேற்படுத்தப் பட்டது. நாயனார் கூறியுள்ள அகரம் ஒலிவடிவாகியது அதாவது நாதவடிவையே எனக் கொள்ளவேண்டியிருக்கிறது.

இருக்கட்டும். அப்படியே வைத்துக் கொண்டாலும் அவ்வொலி வடிவாகிய அகரத்தைச் செவிப்புலனாலாவது அறியக்கூடியதாகவிருக்கிறதே, அதுபோல செவிப் புலனால் கடவுளை அறியக்கூட வில்லையே என்று ஒருவர் கேட்கக் கூடும்.

அது சரியே. வேத சாஸ்திர புராணாதிகளில் உலகம் ஈசுவர சிருஷ்டியென்றும் அவ்விதம் உலக சிருஷ்டியைச் செய்தகடவுள் அதாவது ஈசுவரன் (சகுணப் பிரஹ்மம்) நாமரூபங்களுள்ளவரென்றும், அவர் சதாசிவன், ஆதிநாராயணன், பரபிரஹ்மம், பரம்பிதா என்று பல மதஸ்தர்களால் பல பெயரிட்டு அழைக்கப்படு பவரும் உண்மையில் நாமரூபமற்றவருமான பரம் பொருளினிடமிருந்து உண்டானவர் என்று கூறப்பட்டிருக்கிறது. நாயனார் செய்திருக்கும் அக் குறட் சூத்திரத்தில் இவ்விதம் அர்த்தம் கொள்ள இடமிருக்கிறதா எனக் கவனிப்போம்.

எழுத்துக்களுக்குத் தலைமையாயுள்ள நாதவடிவாகிய 'அ'என்னும் அக்ஷரம். 'அ'என்னும் ஒலி எங்கிருந்து பிறக்கிறதென்று ஆராயுங்கால், தொல்காப்பியத்தை ஆதாரமாகக் கொண்டு செய்திருப்பதாகிய நன்னூலில் பவணந்தியார் "மொழி முதற்காரணமாமணுத்திரளொலி யெழுத்து" அதாவது, சொற்களுக்கு ஆதாரமாயுள்ள அணுக்கூட்டத்தின் காரிய வோசையே எழுத்து என்கின்றார். ஆகையால் இந்நாத வடிவாகிய அகரம் அணுக்கூட்டங்களின் ஓசையால் உண்டாகிறதெனத் தெரிகிறது. அன்றியும் எழுத்துக்களின் பிறப்பைக் கூறுமிடத்து, அன்னார், நிறையுயிர் முயற்சியினுள் வளிதுறப்ப எழுமணுத் திரள் அதாவது உள்ளே நின்ற ஜீவனுடைய பிரயத்தனத்தால் ஏற்படும் காற்றினால் மேலெழுப்பப் படுகின்ற அணுக்கூட்டங்கள் மார்பு கழுத்து முதலிய பல அவயவங்களில் படிந்து அவ்வவயவங்களின் தொழில்களால் சத்தம் வேறு பட்டு வெவ்வேறு ஒலியுள்ள எழுத்துக்களாகப் பிறக்கின்றன எனவும் கூறியிருக்கிறார்.

இதை நோக்குமிடத்து எழுத்துக்கள் பிறக்கவேண்டுமானால் முதலில் ஜீவனுடைய பிரயத்தனம் இல்லாவிட்டால் எழுத்துக்களின் சிருஷ்டி யில்லையென்று விளங்குகிறது. ஆகையால் செவிப்புலனுக் கெட்டக் கூடியதும் நாதவடிவாகியதுமான அகரத்துக்கு ஆதாரம் ஜீவனாகிய அகரமே, அவ்வகரத்தைப் புலன்களாலறிய முடியாது. அது தான் அக்ஷரம் அதாவது அழிவற்றது எனக்கொள்ளவேண்டும்.

இந்த ஜீவனையே நாயனார் அகரமென்றும், அதுவே எழுத்துக்களுக்கு ஆதாரமென்றும், கூறியிருப்பின் அது அவர் கூறியுள்ள உலகசிருஷ்டிக்கு ஒத்திருக்கிறதாவென்று பார்ப்போம். உலக சிருஷ்டிக் கிரமப்படி முதலில் அருபியாயுள்ள கடவுளினிடமிருந்து ஈசுவரன் ஏற்பட்டார். அவரிடமிருந்து உலகம் ஏற்பட்டது. அதுபோல ஜீவனிட

மிருந்து ஒலிவடிவாகிய அகரம் பிறந்தது. அவ்வொலிவடிவாகிய அகரத்திலிருந்து மற்றைய எழுத்துக்கள் உண்டாயின.

| அக்ஷர சிருஷ்டி | உலக சிருஷ்டி |
|---|---|
| ஜீவன் | பரம் பொருள் |
| \| | \| |
| | ஈசுவரன் |
| | \| |
| ஒலிவடிவாகிய அகரம் | உலகம் |
| \| | |

அகரத்தின்சேர்க்கையாலுண்டாகிய இதர அக்ஷரங்கள். ஆகையால் காணப்படாத கடவுளுக்குக் காணப்படும் அகரத்தை நாயனார் உவமை கூறினார் என்று நினைப்பது பிசகு. ஈசுவரனுக்கு நாதப் பிரஹ்மம், சகுணப் பிரஹ்மம் என்று பெயர். நாதவடிவாகிய அகரத்தையே உவமை கூறியிருப்பினும் மிக்கப் பொருத்தமுள்ளதே.

அன்றியும் "அ, ஆ அங்காத் தலையுடைய" அதாவது வாய் திறத்தலினாலேயே, வேறு முயற்சி யன்றி, அகரம் உற்பத்தியாகிறது எனக் கூறப்பட்டிருக்கிறது. "இச்சாமாத்ரம் பிரபோ:" "சிருஷ்டி:" என்றபடி பரம்பொருளினிடமிருந்து ஏற்படும் அகரத்தின் சிருஷ்டியும் சொற்ப முயற்சியுள்ளதாகவே இருக்கிறது.

ஜீவர்களாகிய நாம் அகாரமாகிய ஈசுவரனிடத்தில் அணுக் கூட்டங்களாக அமைந்திருக்கிறோம். ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு அணு. உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளாகிய எல்லா அணுக் கூட்டங்களும் ஒன்று சேர்ந்தது தான் ஈசுவரனுடைய ஸ்தூல தேகம். சகல ஜீவராசிகளின் சூக்ஷ்ம சரீரங்களும் ஒன்று சேர்ந்தது தான் ஈசுவரனுடைய சூக்ஷ்ம சரீரம். இப்படியே மற்ற சரீரங்களும்.

இக்குறளுக்குப் பொருள் கூறத்துணிவது என்போன்றவர்கட்குச் சாத்தியமற்றதாகையால், புத்திமான்களாயுள்ள பெரியோர்கள் மென்மேலும் ஆராய்ந்து அதன் பயனை நமக்களிக்குமாறு, இம்மட்டில் நிறுத்திக் கொண்டு மேற்செல்லுகிறேன்.

இச்சூத்திரத்தின் பயனாக நாமடைவது யாதெனில் ஜீவனுடைய முயற்சியால் அகாமும் அவ்வகரத்தினின்று இதர அக்ஷரங்களும் உண்டாயினபோல, உலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. நாம் கடவுளின் ஒரு அம்சம் என்பதே. இதனால் கடவுள் ஒருவர் உண்டென்றும் 'அவர் தான் உலகத்தைப் படைத்தவர் என்றும்' நாம் அறிந்து கொண்டவர்களாகிறோம். அவ்வித அறிவைப் பெற்றபின் நாம் செய்யவேண்டியதென்னவென்பதை அடுத்த சூத்திரத்தில் கூறுகின்றார்.

(இன்னும் வரும்.)

M. சுப்பராமையர்.

---

# பெற்றோர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஓர் விஞ்ஞாபநம்.

(352-ம் பக்கத்தொடர்ச்சி)

---

பிள்ளைகளிடம் தீக்குணங்கள் ஒன்றும் வளர்வதற்கு இடங்கொடாமல் நாம் நடப்போமாயின், கருவாயிருக்கும் அத்துர்க்குணங்கள் நசித்துப்போம். நாம், நமது குழந்தைகளுக்கு வாஸ்தவமான பிரயோஜனம் இன்னதென்பதை உணராது, நமது அல்ப புத்திக்குத் தோன்றுகிறபடி ஓர் குடிலமான வழியில் அவர்களை நடத்துகிறோம். உதாரணமாக, பகவான் கௌதம புத்தருடைய அந்தரங்கபரிபக்குவத்தை, உணராமல், சுத்தோதனன் என்றவரசன் இவ்வுலகத்திற்குரியஸம்ப்ரமங்களனைத்தையும் ஏற்படுத்தி அவரை ஸம்ஸாரத்திலிறுத்தப் பார்த்தான். அப்போதும் பலிக்கவில்லை. பிரஹ்லாதனுடைய ஆன்ம மலர்ச்சியை யறியாத ஹிரண்யகசிபு, எவ்வித இடையூறுகளை விளைவித்தான்? அதேமாதிரி இப்போது நம்மவர் குடும்பங்களில் சிறு பிள்ளைகள் படிக்கும் பருவத்தில் கோகலே முதலிய சிறந்த தேசாபிமானிகளைப்போல் ஆகவேண்டுமென்ற கருத்துக்கொண்டு, உற்சாஹங்காட்டுவார்களானால், பெற்றோர்கள் உடனே சிறு வயதில் ஓர் கல்யாணம் செய்து விடுகிறார்கள். தம்மைப் பிற்காலத்தில் காப்பாற்றவேண்டும் என்ற தன்னயங்கருதிப்பயந்து, பிறர் நலத்திற்குத் தம்மக்களை உழைக்கவொட்டாமல் செய்கிறார்கள். இத்தகைய கொள்கை தவறேயாகும். பிறர் நலத்தைக் கருதுவோன் சொந்தத் தாய்தந்தையரை அலக்ஷியம் செய்வானா? என்ற யோசனையும், அத்தகைய விசாலபுத்தியுடையவனைத் தாய் தந்தையர் க்ஷேமத்தையும் குடும்ப க்ஷேமத்தையும் கவனிக்கும்படி பழக்குவித்தல் சிரமமல்லவென்ற நினைப்பும் முன் வருகின்றனவல்ல. நமது பிள்ளைகளை நாம் சுகம் பெறுவதற்கு அடைந்திருக்கிறோம் என்று கருதாமல் நமது பிள்ளைகள் சுகமாய் நடத்தப்படு

வதற்கே நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள், என்று கருதவேண்டும். மாடு நன்றாய்ப் பால் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு நல்ல தீனி கொடுப்பது போலல்லாமல், சில ஆன்மாக்கள் அவர்கள் நேர்மையாய் பரிபக்குவமடையும் பொருட்டு நமது வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டும் கருதுவோமானால், நமது பிள்ளைகளை நாம் நடத்தும் முறை முற்றிலும் இப்போதைக் காட்டிலும் வேறுபடும்.

இன்னொரு உண்மையை நாம் முக்யமாய்க் கவனிக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் கூறியபடி, "சிரேஷ்டன் எப்படி நடக்கிறானோ அப்படியே மற்ற மனிதர்கள் பின் பற்றுகிறார்கள். நாம் நமது துர்க்குணங்களை (காமம்; குரோதம், லோபம், மோஹம், மதம் மாத்ஸர்யங்களை) வெளியிடுவோமானால் நமது பிள்ளைகளும் அவ்வழக்கங்களில் சீக்கிரம் மாட்டிக்கொள்வார்கள். சிலர் இத்துர்க்குணங்களை வெளிக்காட்டாமல், மநத்தில் அடக்கிவிடுவோமானால், சிறு பிள்ளைகள் அதனால் கெடமாட்டார்கள் என்று கருதுகிறார்கள் இது மிக அறிவீனம். நமது எண்ணங்கள் சிறுவர்களது மநங்களை யெளிதிற் தாக்கும். சிறுவர்களிடம் மநோசரீரம் நல்ல வளர்ச்சி பெற்றிராது. மநோசரீரம் கொஞ்சங் கொஞ்சமாய் வளர ஆரம்பிக்கும்போது அது நெகிழ்ச்சியுள்ளதாயிருக்கிறது. அதை எப்படி வேண்டுமோ வசப்படுத்தலாம். நாம் நற்சிந்தனை கொள்வோமாயின், நல்வழியில் வசப்படுத்தலாம். தீய சிந்தனைகளை நம் மநத்திற் தங்க இடங்கொடுப்போமாயின், சிறுவர் மநங்களைத் தீய வழியில் வசப்படுத்துகிறோம். நமது எண்ணங்களுக்கு அபாரமான சக்தியுண்டு. நமது எண்ணங்களின் பயனான நன்மை, தீமைகளை உடனே நம்மால் காண இயலாவிடினும், காலாந்தரத்தில் நமதெண்ணங்கள் அளவற்ற நன்மையையோ தீமையையோ செய்யும். பால்யத்தில்

சிறுவர்களின் காமநா சரீரங்கள், நமது இஷ்டப்பிரகாரம் உருவாக்கக் கூடியபடி, அவ்வளவு மிருதுவாயிருக்கிறது. ஆகையால் பால்யத்தில்சிறுவர்களை எத்தகையவழக்கத்திற் குட்படுத்துகிருேமோ, அது ஸ்திரமாய் ஏற்பட்டு, பிற்கால த்தில் மாற்ற முடிகிறதில்லை. இவ்விதமே நமது வார்த்தை களாலும், செய்கைகளாலும் சிறுவர்களுடைய நடத்தை பாதிக்கப்படுகிறது.

பெற்ருேர்களும் உபாத்யாயர்களும் சிறுவர்களை வழி நடத்துவதில், அன்பே முதற் சாதனம். எப்போதும் இடையருமலும், சலியாத நன்னெஞ்சத்தோடும் நமது பிள்ளைகளிடம் அன்பு செலுத்துவோமாயின், குழந்தைக ளிடத்து அமைந்துள்ள நற்குண விசேஷங்களனைத்தையும் மலரச் செய்யலாம். பிள்ளைகளிடம் நாம் எக்காலமும் அன்பையே பாராட்டி வருவோமானல், அவர்களும் நம்மி டத்து விசுவாஸங்கொள்வதோடு, நெருங்கிப் பழகலாமெ ன்ற தைர்யமுங்கொள்கிருர்கள். பயமுறுத்தினலொழிய பிள்ளைகள் வழிக்கு வரமாட்டார்கள், கீழ்ப்படியமாட்டார் கள் என்று சிலர் தவருன அபிப்ராயங்கொள்கிருர்கள். குழந்தைகள் பயத்தில் செய்யுங் கார்யங்களைச் சந்தோஷ மாயும் சிரத்தையாயும் செய்யமாட்டார்கள். யாரிடத்தில் பயப்படுகிருர்களோ, அவர் இருக்கும் வரை எதிரில் கீழ்ப் படிவது போல் நடிப்பார்கள், அவர் வெளியே செல்வாரா யின், பிள்ளைகள் பழையபடி தம் மநம் போன போக்கே தான் நடப்பார்கள். நாம் அன்போடு நடத்தி வருவதால், நம்மிடமும் நமது பிள்ளைகள் விசேஷித்து அன்பு பாரா ட்டுகிருர்கள். ஆகையால் நமது உத்தரவுப்படி நடக்கா விட்டால், நாம் ஒருவேளை அப்ரியமடைந்துவிட்டால் ஸ்நே ஹம் போய்விடுமேயென்று நினைத்துச் சந்தோஷத்துடன்

தாமாகவே நமது சொற்படி நடக்கிறார்கள். பிரியமாய் நடத்துவதினால் பிள்ளைகள் தமது கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பதோடு, நமக்கும் வேலை இலகுவாயும், சந்தோஷமாயும் நடை பெறுகிறது. நாம் எவ்வாற்றானும் பிரியத்துடனேயே நடப்போம் என்பதை நமது பிள்ளைகளுக்கு நன்குணர்த்தவேண்டும். நமது பிரியமான நடக்கையாலேயே, அவர்களுக்கு மேற்கூறிய விதமான நிச்சய புத்தி ஏற்படவேண்டும். அவர்களிடம் எவ்விதமாயும் நாம் கடுமையாயிருக்கலாகாது. கடுமையான ஜாடைகூடக்காட்டலாகாது. எவ்விஷயத்தையும் காரணத்துடனே அவர்களுக்கு விளக்கிக்கூறவேண்டும். ஆயினும் எந்தெந்த சமயங்களில் காரணங் கேட்காமல், நாம் சொன்னவுடனே கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பதையும் அவர்கட்கு நன்கு அறிவுறுத்தவேண்டும். அச்சமயங்களிற் கூடப், பிறகாவது, நாம் அவசியம் காரணத்தை விளக்கிக் காட்டவேண்டும். பெற்றோர்களும் உபாத்தியாயர்களும், அறியாமையால், சிறு பிள்ளைகளை, அவர்களுக்கு யுக்தமென்று எடுத்துக் காட்டாமலே, எதையாவது செய்யச்சொல்லி நிர்ப்பந்திக்கிறார்கள். சிறு பிள்ளைகளுக்கு மதபோதனையுங்கூட அன்பை ஆதாரமாகவே வைத்து நிகழவேண்டும். ஈசன் அன்பு நிறைந்தவரென்றும். ஈசன் எல்லாவிடங்களிலும், நிறைந்திருக்கிறாரென்றும், எந்த உயிர்ப்பிராணிக்கும் எந்தச் செடி கொடிக்கும் எவ்விதக் கெடுதியையும் உண்டுபண்ணலாகாதென்றும், அவ்விதம் செய்தால், ஈசனை வருத்தப்படுத்துகிறோமென்றும், சிறுவர் சிறுமிகளுக்கு இலகுவாய் போதிக்கப்படவேண்டும். சிறுவர்களுடைய இன்னொரு ஸ்வபாவம் எப்போதும் சுறுசுறுப்பாயிருத்தல்.

அந்த வேகத்தைப் பரோபகாரத்தில் நாம் இலகுவில் திருப்பலாம். எல்லாருக்கும் அவசியம் உதவி செய்யவேண்டுமென்றும், ஒரு தீங்கும் செய்யலாகாதென்றும் அடிக்கடி கற்பிக்கவேண்டும். எங்கெங்கு தாம் உதவி செய்யலாமென்று கவனித்து அங்கங்கு போய் உதவிசெய்து பழகும்படிக்கும் நாம் அவர்களை முயற்ச்சிப்பிக்கவேண்டும். குழந்தைகள் தம்மைப் பிறர் அன்பாய் நடத்தவேண்டுமென்றே எதிர்பார்க்கிருர்களாகையால், அவர்களும் பிறரைச் சிநேகமாய் நடத்த விரும்புவார்கள். இவ்விதம் சிறுவர்களைப் பழக்கி வருவோமாகில். ஒருபோதும் எந்தச் செடி கொடியையும், புஷ்பத்தையுங்கூடப் பிடுங்கிக் கசக்கி யெறியமாட்டார்கள்.

சிறுவர்களுக்குரிய நமது கடமைகளில் அதிமுக்யமானதொன்று, அவர்களது தேஹப் பயிற்சியைக் கவனித்து வருவதேயாம். ஏனெனில், விகாஸமடைந்து வரும் ஆத்மா பூர்ணமாய்ப் பிரகாசிப்பதற்கேற்றபடி, அவர்களுடைய சரீரமும் நன்ருய் வளர்ந்து பல பராக்ரமத் தோடமைந்திருத்தல் வேண்டும். பால்யம் முதற்கொண்டே சுத்தத்தின் ஆவசியகத்தையும், அதனுல் ஏற்படும் சௌக்யத்தையும் அவர்களுக் கடிக்கடி வற்புறுத்தவேண்டும். சுத்தமான காற்றும், வெளிச்சமும் அமைந்த இடங்களிலேயே சிறுவர்களை விளையாடும்படி செய்யவேண்டும். அவர்கள் ஓடியாடி விளையாடவேண்டும். இது பட்டண வாஸத்தில் அசாத்தியமாயினும், அற்ப சொற்பமாவது கூடியவரையில் சுத்தமான காற்று வீசக்கூடிய இடங்களுக்கு அடிக்கடி பிள்ளைகளை யழைத்துப் போகவேண்டும்,

இவ்விதம் நமது சிறுவர்களைப் பக்ஷமாய்ப் பழக்கி வருமானல், நமது பெரிய உத்தர வாதத்தைக் கொண்டு செலுத்து வோராவோம். அதன் மூலமாய் விகாஸமுறையை விரைவு படுத்துவோம். நமது குழந்தைகளை நாம் நேரே கவனித்து வருவதால், மநுஷ்ய வர்க்கம் முழுமைக்குமே உதவி செய்வதாகும்.

இத்தகைய வேலையை மேற்கொண்டு உழைக்கும் சங்கங்கள் இரண்டைப் (ஸ்வர்ணமணிமாலைச் சங்கம், நக்ஷத்ர தூதர்களின் சங்கம்) பற்றி நமது பத்ரிகையின் முன் சஞ்சிகைகளில் வெளியிடப் பட்டிருக்கிறது.

ஜகத்குருவாகிய பரமாசார்யர் அதிசமீப காலத்தில் தோன்றுவாராதையால், அக்காலத்தில் யௌவன தசையடையக்கூடிய வாலிபர்களை இப்போது முதற்கொண்டே நற் பழக்கத்திற்குட் படுத்தி வரவேண்டிய தவசியம்.

ஓம் தத் ஸத்

B. S. ராமசுப்பையர்.

---

# மீராபாய்.

(345-ம் பக்கத்தொடர்ச்சி.)

## அங்கம் 2. களம் 2.

---

காலம்—காலை. இடம்—கிருஷ்ணாலயம். நாடக பாத்திரர்கள்—(பகவதர்ச்சனை செய்து கொண்டிருக்கும் மீராபாயும், சேடியும் இன்னுமநேக ஜனங்களும், அவர்கள் நடுவிலொரு கிருஸ்தவனும்)

---

(சாஸ்திரியார், குமார சிங்க், ஜய சிங்க், இம் மூவரும் வருகிறார்கள்)

சாஸ்—எவ்வளவு கூட்டம், ஸ்வாமீ, இந்த ஸ்திரீ பக்தி செய்கிறதைப் பார்க்க.

குமா—ஓய், மெல்லப் பேசும்.

சாஸ்—(சுற்றிப் பார்த்து) இவ்வளவு நிச்சப்தமா யொரு கோயிலிலும் ஜனங்களிருப்பதை நான் பார்த்த தில்லை. என்ன ஆச்சரியம் ஸ்வாமீ?

குமா—(கரத்தால் வாயை மூடிப் பேசாமலிருக்கும் படி ஜாடை செய்கிறான்.)

சாஸ்—ஸ்வாமி, யாரையா அவர்? முகத்தி லொரு அறி குறியு மில்லாமலிருக்கிறார். பார்த்தால் கிருஸ்தவர் மாதிரி யல்லவோ தோன்றுகிறது.

ஜய—கிருஸ்தவர் தானவர். சும்மாவிரும் ஓய் எதா வது உளரிக் கொண்டே யிருக்கிறீர்.

சாஸ்—என்ன அநியாயம் ஸ்வாமீ?

ஜய—வாயை மூடிக் கொண்டிருக்கிறீரா, இல்லையா?

சாஸ்—(தனக்குள்) காலத்துக் கேற்ற கோலம் தான். கிருஷ்ணாலயத்துக்குள் கிருஸ்தவன் வர எப்படி மனங் கொண்டான்? கிருஸ்தவர்களுக்கு நம்முடைய மதத்தில் துவேஷ முண்டென்றல்லவோ கேள்விப்பட்டிருக்கிறேன். அவனுக் கெப்படி இந்த புத்தி வந்தது? அவனைப் பார்த் தால் வெகு பயபக்தி யோடு கூடியிருக்கிறவன் போல் தோ ன்றுகிறது. உத்தரீயத்தை யிடுப்பில் வரைத்துக் கட்டி இருகரங்களையு மஞ்சலி பந்தம் செய்து கிருஷ்ணவிக்ரஹ த்தினிடத்திலிரு கண்களையும் சலன மில்லாம செலுத்தி நிற்கிறான். இதென்ன ஆச்சரியம்! (சுற்றிப்பார்த்து) ஒவ் வொருவரு மிப்படித்தானே நிற்கிறார்கள். இந்த ஸ்திரீயின் பக்தி விசேஷமாவிது?—உண்மையாகவே பக்தி இல்லாதவர் கள் கூட இங்கு வந்தால் பக்தர்களாய் விடுவார்கள் போல் தோன்றுகிறதே. இவ்வளவு சிரத்தையுடன் பகவானுக் கெந்தக் கோயிலிலர்ச்சனை செய்கிறார்கள்?—என்னை யறியா மலே என் மனதுக்கோ ராஹ்லாத முண்டாகிறதே. கார ணமில்லாமலா இவ்வளவு ஜனங்களிங்கே கூடியிருக்கிறார் கள்? இது வரைக்கு மொரு கோயிலிலுமிந்த மாதிரியான சாந்தி யென் மனதிற் கேற்பட்டதில்லையே. இவளுடைய பக்திவிசேஷத் தாற்றானோ அல்லது பகவானுடைய கிருபை தானோ? இங்கே வருகிறவர்களுடைய மனது சுத்தமாகு மென்பதிற் சந்தேகமில்லை (மீராபாய் அர்ச்சனை முடித்து கர்ப்பூரஹாரத்தி சமர்ப்பிக்கிறாள்.)

இவளைப்பார்த்தால் சாதாரண ஸ்திரீயென்று ஒருவ ரும் சொல்லமுடியாது. லக்ஷ்மீ தேவியே அவதாரம் செய் ததாகத் தோன்றுகிற தேயல்லாமலிப்புவியிலுதித்த ஒரு ஸ்திரீ ஜனமாகத் தோன்றவில்லை. (சேடி கர்ப்பூரஹாரத்தி யைக் கையிற் கொண்டோவ் வொருவருக்கும் கொடுத்து வருகிறாள். (அக்பர் ஸந்யாஸியுடை தரித்த வண்ணம் வருகிறான்.)

அக்—இதுதான் அபுல்பாஸல் சொன்னகிருஷ்ணுலய மென்பதிற் சந்தேகமில்லை. அவன் சொன்னதைவிட எவ்வி தத்திலுமதிக மாயிருக்கிறதேயல்லாமல் ஒரு விஷயத்திலா வது அவன் சொன்னதற்குக் கீழ்ப்படவில்லை. என்ன கூட் டம்! எவ்வளவு சிரத்தை! (ஒருவரை நோக்கி)

பூஜை முடிந்தாயிற்ரு? இனிபொரு விசேஷமு மில் லையோ?

ஜய—இப்போதர்ச்சனை முடிந்தது. இனிமேல் கா னம் செய்யப் போகிருளெங்களன்னை.

அக்—ஸீதாராம், ஜயராம், ஸீதாராம்

(மீராபாய் பாடுகிருள். அக்பர் கண்ணீர் விடுகிருர். பாட்டு முடிந்தபிறகு மீராபாய் வெளியே வரும்போது. ஸாது வேடம்பூண்ட அக்பரைக் கண்டு நமஸ்கரிக்கிருள்).

அக்—பகவானுடைய கிருபை பூரணமாக இருக்க க்கூடவது, (தன் மகரகண்டியை யெடுத்துக் கொடுத்து) இதை பகவானுக்கர்ப்பணம் செய்யவேண்டும்.

மீரா—(சற்று தயங்கி) தாங்களோ ஸாதுவாயிற்றே. தங்களுக்கிந்த விலையுயர்ந்த கண்டிகையெப்படிக் கிடை த்தது?

அக்-அதைப்பற்றி சந்தேகம் வேண்டாம். கெட்ட வழியி லகப்பட்டதல்ல. அது காலையில் யமுனையில் ஸ்நானம் செ ய்தபோது என் காலிலகப்பட்டுக்கொண்டது. அதை யெடுத்து பகவதர்ப்பணம்செய்யவேண்டுமென் றுதீர்மானித் துக் கொண்டேன். என் மனோரதம் நிறைவேற இப்ரமே யம் கிடைத்தது. நிச்சந்தேகமாயிதைக் கிருஷ்ண விக்ர ஹத்துக்கு ஸமர்ப்பிக்கலாம்.

மீரா—(அதை வாங்கிக்கொண்டு) ஈசன் செயலையறிந்தோர் யார்? (அதைக் கிருஷ்ண விக்ரஹத்தின் கழுத்திலணிந்துவிட்டுத் தன் சேடியுடன் போகிறாள்).

அக்—(தனக்குள்) அபுல்பாஸல் சொல்லுகிறது வீண் போகுமா, தவறுமா? ஆஹா! என்ன பக்தி! என்ன பக்தி!! ஒரு ஸ்திரீ, தான் பக்தி செய்வதோடுங்கூடத் தன் நகரத்திலுள்ள ஜனங்களெல்லோருக்கும் பக்தியைப் புகட்டுகிறதென்றால் சாதாரணமான காரியமா? இது வொரு விசேஷமான சூசனை யென்றே எண்ணவேண்டும். இவளும் சாமான்யமான ஜீவனல்ல. ஜகதுத்தாரணம் செய்யும் பொருட்டாவிர்ப்பவித்திருக்குமொரு பெரிய ஜீவனென்று தானூஹிக்கவேண்டும். இவளைப்பற்றின விஷயங்களை நன்றாய்க் கவனித்து வரவேண்டும். அவைகளிலிருந்து அநேக ரஹஸ்யங்களை கிரஹிக்கலாம். அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை யபுல்பாஸல் செய்வான். நான் இனி இங்கு தாமதிக்கவேண்டியதில்லை. வந்த காரியம் பலிதமாயிற்று. ராஜ்யத்திற்குத் திரும்புவோம். (போகிறார்)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

---

401

## சிறுவர்க்குரிய விஷயம்.

## பிரஹ்லாத சரித்ரம்.

இப்போது பிரஹ்லாத சரித்ரத்தை உங்களுக்கெழுதியிருக்கிறேன். அதில், ஓர் சிறுவன், ஈசுவரனிடத்தில் எவ்விதம் மிகுந்த பக்தியுள்ளவனாயிருந்தானென்பதையும் அதைப் பொறாமல் பெருங் கோபங்கொண்ட தன் தகப்பனுக்கும் எவ்விதம் மிகக் கீழ்ப்படிந்து நடந்துவந்தான் என்பதையும் அறிவீர்கள்.

பிரஹ்லாதன் ஓர் ராஜகுமாரன். அவ்வரசன் பெயர் ஹிரண்யகசிபு, அவன் ஓர் துஷ்ட அரசன். அவன் வெகு கர்வங்கொண்டவன். பெருமையில் தான் ஈசுவரனுக்குச் சமமென்று பொய் எண்ணங்கொண்டான். அவன் தன் இஷ்டப்படி நடந்தான். விஷ்ணு ஒருவரே எல்லாவற்றையுங் கொடுத்து மனிதரைத் தீங்கினின்று பாதுகாக்கிறார் என்பதை மறந்தான்.

பிரஹ்லாதன் சிறு பையன். அப்போது குருகுலத்தில் வசித்துவந்தான். அவன் வெகு புஸ்தகங்களை எல்லாம் வாசித்தான், எல்லாவற்றினும் மேலாக விஷ்ணுவிடத்தே அன்பு செலுத்திவந்தான். ஒருநாள் அவன் தகப்பனார் குருவுடன்கூடப் பிள்ளையை ஸமஸ்தானத்திற்கு வரும்படி யழைப்பித்தார். அப்படியே பிரஹ்லாதனும் போனான்.

பிரஹ்லாதன் தன் பிதாவின் இராஜ ஸமஸ்தானத்திற்கு வந்தவுடன் மிகுந்த வணக்கத்துடன் தலை குனிந்து கை கூப்பினான். ஒரு புத்திரன் தன் தகப்பனிடத்து எப்போதும் மரியாதை செலுத்தவேண்டுமென்று அவன் நன்குணர்ந்தவன். அப்போதவனை, அரசன் எழுந்திருக்கச் சொல்லி, அவன் கற்றுக்கொண்டதைச் சிறிது ஒப்பிக்கச் சொன்னான்.

பிரஹ்லாதன் சொன்னதாவது:—“அப்பா! தங்களிஷ்டப் படியே நான் கற்றுக்கொண்டதைக் கூறுவேன். இவ்வுலகத்திற்கு நாதனாகிய (இரக்ஷிப்பவராகிய) விஷ்ணுவைப் பூஜிப்பதற்குக் கற்றுக்கொண்டேன்.”

இவ்விதம் சொன்ன பிரஹ்லாதனிடத்து ஹிரண்யகசிபுவுக்கு அடங்காக் கோபம் உண்டாகி, குருவைப் பார்த்துச் சொல்கிறான். “ஓய்! நீர் என் பையனுக்குச் சொல்லி வைத்தது இது தானா! என் சத்ருவையல்லவோ துதிக்கிறான். நானே எல்லோருக்கும் ஈசுவரன். விஷ்ணு என்னுடைய சத்ருவென்றறியீரா?” இவ்விதம் சொல்லிப் பையனைப் பழையபடி குரு குலத்திற்கே யனுப்பிவிட்டான். பிறகு அங்கு நாநாவிதமான பாடங்களைப் படித்த போதிலும், விஷ்ணுவிடத்திருந்த அன்பையும் பக்தியையும் ஒரு போதும் கைவிடவில்லை.

கொஞ்ச காலம் சென்ற பிறகு, ராஜா ஹிரண்யகசிபு மறுபடியும் பிரஹ்லாதனை அழைப்பித்து, அவனுக்குத் தெரிந்த சில கவிகளைச் சொல்லச் சொன்னான். உடனே விஷ்ணுவை ஸ்தோத்திரஞ் செய்ய வாரம்பித்தான். அரசனுக்கோ கடுஞ்சினமுண்டாகி, அவனைக் கொன்று போடும்படி கட்டளையிட்டான். கொலையாளிகள் அவனை யடித்துக் கொல்ல முயன்றும், அவனுக்குச் சேதமே ஏற்படவில்லை. அவன் கொஞ்சமும் வருத்தமுறவில்லை.

“விஷ்ணுவைத் துதிப்பதை விடு, உனக்கு யாதொரு தீங்கும் செய்யமாட்டேன்” என்று ஹிரண்யன் பிரஹலாதனைப் பார்த்துச் சொல்ல, பிரஹ்லாதன், “எனக்கு எவ்வித அபாயமும் நேராது, என்னுடைய ஆபத்தில் என்னைக் காத்துக் கொள்வதற்கு விஷ்ணு இருக்கிறார்” என்று பதில் உரைத்தான். பிறகு அரசன் மிக்க கோபமுள்ளவனாய் கொடிய ஸர்ப்பங்களைக் கடிக்க விடும்படி ஏவினான். விஷ்ணுவிடத்திருந்த பக்தியால், அப்பாம்புகள் கடித்தபோதிலும் அவனுக்கு யாதொரு அபாயமும் ஏற்படவில்லை.

பிறகு பெரிய யானைகளை இவனுக்கு விரோதமாய் ஏவி விட்டான். யானைகளோ இவனிடத்தில் போவதற்கு நடுங்கின. பிறகு ஓர் பெரிய அக்னி குண்டத்தில் பிரஹ்லாதனைப் போடும்படி ஆக்ஞை செய்தான். அக்னியும் அவனை எரிக்கக் கூடவில்லை. அச்சமயம் விஷ்ணு பகவான், எரிக்கும் சக்தியை அக்னியிடமிருந்து கவர்ந்து விட்டார். ஒன்றும் பையனுக்குத் தீங்கிழைக்கக் கூடாமற்போயிற்று. மறுபடியும் பையனை குருக்களிடம் அனுப்பி, ஹரிஸ்துதியை விடும்படி செய்விக்கச் சொன்னான்.

பிரஹ்லாதனோ எப்போதும் ஹரியையே பாடிப் புகழ்ந்து கொண்டு பிறரிடத்திலும் ஹரிகதையையே சொல்லி வந்தான். அரசன் காதுக்கு இச்செய்தி எட்டவே, அவன் கோபாவேசத்தால், பையனுக்கு விஷங் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தான். கடைசியாக விஷமும் பலிக்கவில்லை. சூன்யக்காரர்களைக் கொண்டு ஏவல் முதலிய தீச்செயல்களால், ஹிரண்யன் பிரஹ்லாதனைக் கொல்லமுயன்றும், அந்த ஏவலாளிகள் தம் தீவினையால் தாமே கொலையுண்டார்கள்.

இவர்கள் இறந்த செய்தியைப் பிரஹ்லாதன் கேள்வியுற்றதும், சந்தோஷப்படவேண்டியதிருக்க, அவர்களுக்கிரங்கி, "ஹே! விஷ்ணோ! எனக்கிவர்களிடத்தில் ஒரு போதும் கோபங் கிடையாது. அவர்களை என் ஸ்நேகிதர்களாகவே மதிக்கிறேன். உமது பார்வைக்கேற்க நான் நல்லவனாயிருப் பேனாகில், அவர்களைப் பிழைப்புமூட்டும்," என்று பிரார்த்தித்தான். உடனே, மாண்டவர்கள் எல்லோரும் உயிர் பிழைத் தெழுந்தார்கள்; "இளவரசே! நீடூழி வாழ்க. உமக்கு ஏராளமான ஐசுவர்யமும், தேஹ சௌக்யமும் பலமும், அநேக புத்ரர்களும் உண்டாகட்டும்" என்று உயிர்த் தெழுந்தோர் ஆசீர்வதித்தார்கள். அவர்களே இச்சமாசாரத்தை இராஜாவிடத்திற் போய்ச் சொன்னார்கள்.

ஹிரண்யகசிபு மறுபடியும் பிரஹ்லாதனை யழைத்து, "இவ்வற்புத சக்தி உனக்கெப்படி உண்டாயிற்று? அதன் இரகசியம் என்ன?" என்று கேட்டான். பிரஹ்லாதன் தன் பிதாவை நமஸ்கரித்து, "அப்பா, என்னிடத்து யாதொரு இரகசியமுமில்லை. எந்த சக்தியுமில்லை. ஹரியானவர் எல்லா வஸ்துக்களிலும் அமர்ந்திருப்பதால், நான் ஒன்றுக்கும் தீங்குசெய்வதில்லை, எல்லாவற்றையும் எல்லோரையும் அன்பாய் நேசித்துவருகிறேன்.'' என்று வணக்கமாய்ச் சொன்னான்.

இன்னமும் அரசனது மூர்க்கத்தனம் தணியவில்லை. எப்படியாவது பிள்ளையைக் கொல்லவே முயன்றான். முயன்றும் பலிக்கவில்லை. பிரஹ்லாதனும் விஷ்ணுவைத்தவிர வேறொருவரையும் பூஜிப்பதில்லை. விஷ்ணுவையே எப்போதும் தியானித்துவந்தான்.

இப்படியிருக்கையில் மஹாவிஷ்ணு மஞ்சள்வஸ்திரந் தரித்தவராய்ச் சடிதியில் குழந்தையின்முன் தோன்றினார். பிராஹ்லாதன் சற்று பயந்து, தன்னைத் தயவோடு பார்க்க வேண்டுமென்று கெஞ்சி, உடனே நமஸ்கரித்தான். "உன்னிடம் திருப்தியடைந்தேன். நீ எதைக் கேட்பாயோ, அதைக் கொடுப்பேன்." என்று விஷ்ணுபகவான் விடை பகர்ந்தார். நம்மைப் பார்த்து ஈசுவரன் இவ்விதம் சொல்லியிருந்தால், நாம் அவரை என்னகேட்டிருப்போம்? பலம் ஐசுவர்யம், பெருமை, படிப்பு இவைகளில் எதையாவது வேண்டியிருப்போமல்லவா? பிரஹ்லாதனோ "நான் எப்போதும் உம்மையே சிந்தித்துக்கொண்டு, உம்மிடத்திலேயே பக்திசெலுத்திக்கொண்டிருக்கவேண்டும் என்ற ஓரே ஆசை தான் எனக்குண்டு, வேறொன்றுமில்லை" என்றான்.

"பூலோக ஐசுவர்யம் எல்லாவற்றிலும் கடவுளிடத் தன்பே மேலானது" என்று பிரஹ்லாதன் நன்கறிந்தவன். பின்பு விஷ்ணு :—"நீ எற்கனவே பக்தியுள்ளவன். இனியும் அப்படியேயிருப்பாய் இன்னும் வேறு எதாவது வரங் கேள்" என்று சொன்னார்.

உடனே பிரஹ்லாதன் தன் தகப்பன்செய்த பெரும் பிழை எல்லாவற்றையும் மன்னிக்கும்படி கடவுளைவேண்டினன். "அப்படியே ஆகக்கடவது" என்று விஷ்ணுவும் கூறி, இன்னுமொரு வரத்தையும் கேட்கச்சொன்னர். ஆயினும் பிரஹ்லாதன் தனக்கு ஒரு ஆசையும் இல்லையென்றும், தனக்கு வேண்டியன எல்லாம் விஷ்ணுவிடமிருக்கின்றனவென்றும், நினைத்து ஒன்றையும் கேட்கவில்லை. உடனே பகவான், "உனக்குப் பரமஸௌக்யம் உண்டாவதாக" என்று சொல்லி ஆசீர்வதித்து மறைந்தார்.

பிரஹ்லாதன் அரண்மனைக்குப்போய்த் திரும்பிப்பார்க்கவே, விஷ்ணுவின் வாக்குப்பிரகாரம், தகப்பனர் கோபம் அனைத்தும் பஞ்சாய்ப் பறந்தது. கடவுளின் கருணையானது அவன் கல்நெஞ்சத்தை உருக்கியது. அவன் பிரஹ்லாதனை உச்சிமுகர்ந்து முத்தமிட்டு, "அப்பா! குழந்தாய்!! நீ உயிர்தரித்தும் இருப்பாயா என்று கொஞ்சமும் நினைக்க முடியாத கொடுஞ்செயல்கள் மூர்க்கத்தனத்தால் செய்தேனே!" என்று சொல்லிக் கண்ணீர் ஆறுப்பெருக, துயர் ஆற்றுமையால் நொந்து அழுதான். பிரஹ்லாதன் பிதாவை நமஸ்கரித்து, விடைபெற்றுச் சென்று தன் தகப்பனுருக்கும் குருவுக்கும் செய்யவேண்டிய கடமைகளை ஒரு சிறிதும் தவருது செய்துவந்தான்.

இக்கதையால் ஈசுவர பக்தியானது எப்படி ஒரு சிறு பையனையுங்கூட எவ்வித ஆபத்தினின்றும் தப்புவித்தது என்பது நன்ருய் விளங்குகிறது. விஷ்ணுவானுலும் சரி கிருஷ்ணனுனுலும் சரி பரமேசுவரனுனுலும் சரி அவர்களிடத்தில் பக்தியோடிருப்பது, நமக்கு நேரும் எவ்வித ஆபத்துகளிலும் துணையாயிருக்கும். ஈசுவரனையேநினைத்துவருவோமாயின், எவ்விதமாயினும் நன்மையையே கடைப்பிடிக்கும் தைர்யமுண்டாகும்.

வஸந்தானந்தன்.

# தியானக்கிரம விஷயம்.

## நவம்பர் மாசம்.

21. உனக்குத் துன்பம் வருவதைக் கௌரவமாக நினைத்து உன் கர்ம பலன் என்னவிதமாயிருந்தாலும், அதை நீ ஸந்தோஷத்துடன பொறுத்துக் கொள்ளவேண்டும். உன்னுடைய கெட்ட கர்மத்தின் பலன்கள் அநுபவிக்கப்பட்டு நீ கர்மபந்தமற்றுப் போனலொழிய நீ குருநாதனுக்கு பிரயோசனப்படமாட்டாய்.

22. நீ சொத்தில் ஆசையைத் தவிர்த்து விடு. நீ எந்த வஸ்துக்களை அதிகமாக விரும்புகிறாயோ அவைகளை கர்மா உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளும். நீ நிரம்பவும் நேசிக்கும் மனிதர்களைக்கூட உன்னிடமிருந்து அபகரிக்கும். அப்பொழுதுகூட நீ சந்தோஷமுள்ளவனாயிருக்கவேண்டும். எல்லாவற்றையும் தியாகஞ்செய்துவிடத் தயாராயிரு. குருநாதர் தமது சக்தியானது தம் சிஷன் மூலமாய் மற்றவர்களை அடையும்படி செய்ய அடிக்கடி நேரிடும். சிஷன் மனத்தளர்ச்சிக் குட்படுவானானல் அவர் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்பொழுதும் சந்தோஷத்துடனிருக்க வேண்டும். இதுவே உன் முக்ய நியமமாயிருத்தல் வேண்டும்.

23. உபகாரமுள்ளதும், சுயநயமற்றதுமான வேலை எல்லாம் குருநாதன் வேலை. ஆகையால் அத்தகைய வேலையை நீ குருநாதனுக்காகச் செய்யவேண்டும்

24. உனக்கு குருநாதனிடம் திடமான நம்பிக்கையிருக்கவேண்டும். இல்லாவிட்டால் குருநாதனும் உனக்குதவி புரிய முடியாது. பூர்ண நம்பிக்கையில்லாவிட்டால் அவரது அன்பும் சக்தியும் உன் வழியே தடையின்றி வராது.

25. "அன்பே சிவம்" அன்பே உருவெடுத்தவர் ஈசுவரன். நீ ஈசுவரனுடன் ஐக்கியமாக இச்சிக்கும் பக்ஷத்தில் கிஞ்சித்தும் சுயநயமின்றி பூர்ண அன்பு உன்னிடம் நிறைந்திருக்க வேண்டும்;

26. எப்பொழுதும் பிறருக்குதவி செய்யச் சமயம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

27. ஒவ்வொரு ஜீவராசியினிடமும், வஸ்துவினிடமும், நன்மையிருக்கிறது, அவ்விதம் தீமையுமிருக்கிறது. இவைகளில் எதையாவது சிந்தித்துப் பலப்படுத்தலாம் அதனால் ஒருவன் விருத்தி யடையும்படி உதவலாம் விருத்தியாக வொட்டாமல் தடுக்கலாம். ஈசுவர ஸங்கல்பத்தின் வழிபடலாம் அல்லது அவரை எதிர்க்கலாம்.

28. அஜாக்கிரதையினல் விளையும் துன்பம் அதிகம்—அதாவது ஒரு செய்கையினல் மற்றவர்கள் எவ்விதம் பாதிக்கப் படுவார்கள் என்ற விஷயத்தைப்பற்றி நினைக்கத் தவறுவதேயாகும்.

29. நன்மை செய்வதிலேயே தீவிரமுள்ளவனயிரு பிறருக்கு கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற இச்சையானது உன்னிடம் பூர்த்தியாயிருக்க வேண்டும். உன்னைச் சுற்றிலும் உள்ள, மனிதர்கள் மாத்திரமல்ல. பிராணிகள், புற் பூண்டுகளுக்கும் உதவி செய்யச் சமயம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நீ ஈசுவரனையடைய இச்சிக்கும் பக்ஷத்தில் அது உன்னுடைய சுயநலத்துக்காக அல்ல; ஈசுவரனின் அன்பு மற்றவர்களைப்போய் அடைய நீ கருவியாயமைய வேண்டுவதற்கேயாம்.

30. நிவர்த்தி மார்க்கத்தில் இருக்கிற ஒருவன் தனக்காக ஜீவிக்க மாட்டான், பிறருக்காக ஜீவிக்கிறன். மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்யும் நிமித்தம் தன்னை மறந்து விடுகிறன். இவனுடைய் ஹிருதயத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் ஈசுவரகிருபையானது உலகத்தில் பிரகாசிக்கும்படி செய்ய இவனெரு ஜோதியாயிருக்கிறன்.

பிறருக்குதவி செய்யும்படி உன்னைத் தூண்டச் சாதகமாயிருக்கும் ஞானத்தை நீ எவ்வழியாய் அடைந்தனையோ அவ்வழியை உலகத்தில் பாவச் செய்வாயாக.

---

408

# தியானக்கிரம விஷயம்.

---

## டிசம்பர் மாசம்.

[சமீபகாலத்தில் ஒரு அவதார புருஷரை அநேகர் எதிர்பார்ப்பதில், அதுவிஷயமாக இந்த மாச அப்பியாசம் ஏற்படுவதால், முன் அவர் கிருஷ்ணபகவான்—கௌதமபுத்தர்—இயேசுகிருஸ்து நாதர் இவர்களாக அவதாரம் செய்த காலத்திலுண்டான சில விஷயங்களை இப்பொழுது ஞாபகத்துக்குக் கொண்டுவர அடியில் விவரிக்கப் பட்டிருக்கிறது.]

மாசாந்தர அப்பியாசம் :—ஜகத்குருவை எதிர்பார்த்து அவர் திருவரவிற்கேற்ற ஆயத்தம்செய்.

### வார அப்பியாசம்.

1-வது வாரம்:—உன் நாதன் எப்பொழுது வருவாரென்று உனக்குத் தெரியாதாகையால் அவர் வரவை எப்போதும் எதிர்பார்த்தவண்ணம் இரு. (மார்க்கு 24—42) இல்லாவிடில் அவர் சடிதியில் வரும்போது, விழித்திராமல் நீ தூங்கிக்கொண்டிருப்பாய். (மார்க்கு 13—36) நீ எதிர்பார்க்கும் பிரபு திடீரென்று அவர் ஆலயத்துக்கு வருவார். (மார்க்கு 3—1)

2-வது வாரம்:—நமது பிரபுவின் வருகைக்கு நேரான ஒரு பெரிய ராஜபாட்டையாக இப்போதுள்ள பாலைவனத்தில் சீர்திருத்தம்செய். (ஈசைய்யா 40--3)ஹே! புண்ய க்ஷேத்ரமாகிய ஜெருஸலேமே! யூதேயா தேசத்துப் பட்டணங்களில் சிறந்த ஜெருஸலேமே! உன் உரத்த சப்தத்தால் ஈசுவரனுடைய திருவரவை எந்நாட்டிலும் பிரபலப்படுத்தி உத்கோஷிப்பாயாக. பரமாசார்யன் திருவரவைப் பஹிரங்கப் படுத்தக் கூசாதே, பயப்படாதே. (ஈசைய்யா 40—9)

(இன்னும் வரும்.)

கே. எஸ். ராமசந்திர ஐயர்.

இச்சபையோர் தத்துவ தரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மஞான விஷயமாய் உழைத்து, நாஸ்திகத்தைத் தொலைத்து, மத விஷயங்களில் அறிவுடன் கலந்த சிரத்தையை விளைத்து, மநுஷ்ய வர்க்கத்திற்குபகரிப்பவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மதஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும தழுவாமலுமிருக்கலாம். இம்மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களையும் பாரபக்ஷமின்றி ஆராய்வதால், மதத்வேஷம் நீங்கியவர்களாயும், அபிப்ராய பேதங்களால் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபையோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமல்லாமல், தத்துவத்தை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவினாலேயே, இச்சங்கத்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்பினாலும ஆழ்ந்த சிந்தனையாலும், சுத்த சர்யையாலும், உயர் நோக்கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தையடையக்கூடும். தீவ்ரமான உழைப்பின் பயனான அநுபவத்தால்தான் ஒருவனுக்கு உண்மை கைகூடும். நிர்ப்பந்தத்தால் கட்டுப்படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது, அறிவில்லாமல் நம்பலாகாது. எல்லோரிடத்தும் பொறுமையும, பொறுமையற்றவர்களிடமுங்கூட நமது கடமையாகக்கொண்டு, அன்பையே காட்டுவதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல், அவர்களுக்கு போதிப்பதுமே சிலாக்கியமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும் பிரஹ்மஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனாலதை அசட்டை செய்யாதுபடிக்கவேண்டுமென்றும் ஒருவரையும் ஓர் மதத்தினின்று இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகாயுள்ள உபதேசங்களை,யநுஸரிக்கச்செய்தலே மேன்மை யென்றும் இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர் லக்ஷ்யம். உபசாந்தமே இசசபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும் ஆதாரமான தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத்தான் சார்ந்தது, அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன் தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்சய விபரீதங்கள் அனைத்தையும விலக்கி, எத்தகைய உயர்ந்த நீதிநெறியுடனும் பரமகாருண்யத்தோடும் விகாஸமுறையானது நடைபெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப்படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது அடிக்கடி நேரும் ஓர் ஸம்பவமென்றும. ஸ்தூலதேஹம் நீங்கியவுடன் கட்டவிழ்த்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடுபட்டு அதிமேன்மையான ஸௌக்ஷ்யலோகத்தில் ஜீவன் விழித்துக்கொள்கிறானென்றும் விவரிக்கின்றது. ஞானிகள் நிதர்சனமாயறிகின்றவாறே, நமது யுக்திக்கும் பொருத்தமாக, பற்பல மதங்களின் கொள்கைகளையும் ஆசரணைகளையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களுடன் விளக்குகின்றது.

பிரஹ்மஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர், கற்று, உணர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்கவும், பிரியப்படும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான **பிரஹ்மஞானியாகவே ஒழுகுவாராக.**

410

## அவசியமான அபூர்வ ஔஷதங்கள்.

### ஓமத்திராவகம்.

இது வாந்திபேதி, பேதி, அக்னிமாந்தம், அஜீர்ணம், வயிற்றுப்பலம், அஜீர்ணத்தால் உண்டாகும் நெஞ்செரிவு, தலைநோய், வயிற்றுவலி இரணம், இவைகளுக்கு திறமான மருந்தாகும். ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய சிறந்த குடும்ப ஔஷதம் விலை (24 வேளை மருந்தடங்கிய) ⅛ ஒன்ஸ் சீசா 1-க்கு 8 அணா.

### தந்தவேதனுஹரம்.

உலக பிரசித்தமான இந்த ஔஷதம் எப்பேர்க்கொத்த உக்கிரமான பல் நோயையும் உடன் சமிப்பிக்கத்தக்க பூர்ணசக்தியுடையது. விலை சீசா 1-க்கு 8 அணா. சிறியது 4 அணா.

### வதனகாந்தி.

அழகிய முகத்தின் காந்தியைக்கெடுத்து மனக்கவலையையும், பார்க்க வெறுப்பையும் உண்டுபண்ணுகிற கெட்ட முகப்பருவை துலைப்பதில் சிறந்தது, முகத்திற்கு காந்தியை கொடுப்பது, சுகமான பரிமளத்தோடுகூடியது. சீசா 1-க்கு 4 அணா.

### அனந்தா—தந்தசூர்ணம்.

சிறந்த மூலிகைகளால் தயாரித்தும் பரிமளம் நிறைந்துமாகிய இப் பல்பொடி பல்வலி, பல்சொத்தை, இரத்தம்வருதல், ஈர்வீக்கம், வாய்ப்புண், வாய்நாற்றம், முதலியவைகளை, துலைத்து பல்லுகளையும் ஈரையும் கெட்டிப்படுத்தி, வாக்குருசியையும், பரிமளத்தையும் கொடுப்பதே இதின் உபயோகத்தால் அடையும் பயன். விலை பெட்டி 1-க்கு 4 அணா.

### வழுக்கை விரோதி

விருபமாகிய வழுக்கை தலையில் திருட மூலங்களோடுகூடிய அழகிய ரோமங்களை உண்டாக்கி வளர்விடக்கூடிய சிரேஷ்ட ஔஷதம். மூளைக்கு குளிர்ச்சியைக்கொடுப்பது மனோஹரமான வாசனையோடு கூடியது விலை சீசா 1-க்கு 8 அணா.

### மூலரோக நாசகம்.

உள்மூலம், வெளிமூலம் முதலிய எப்பேர்கொத்த மூலரோகங்களையும் அணைப்படுத்துவதில் பேர்பெற்றது விலை டின் 1-க்கு 12 அணா.

### சர்வ சிரேஷ்ட ரோமஸம்ஹாரி.

தேகத்தின் எப்பாகத்திலிருந்தும் அவசியமில்லாத ரோமங்களை தோலிற்கு, எரிச்சல், புண்முதலிய எப்பேர்க்கொத்த கெடுதியும் செய்யாமல் நிமிஷத்தில் ரோமங்களை நீக்குவதில் சிறந்தது. ஹிதமான வாசத்தோடு கூடியது. குணபாடத்தில் கூறியுள்ள சிரேஷ்டமருந்துகளால் தயாரித்துள்ளது. விலை பெட்டி 1-க்கு 8 அணா. சிறியது (சீசா) 1-க்கு 4 அணா.

### வெள்ளி கில்ட்.

மின்சார சக்தியின் அறிவு தேவையில்லை. சுளுவில் 5-நிமிஷத்தில் கில்ட் கொடுக்கக்கூடியது. செம்பு, பித்தளை முதலியவைகளால் செய்துள்ள பங்கள் தட்டு, பீங்கான், கெடியாரம், முதலிய எல்லாவித சாமான்களையும் சுயம் வெள்ளிக்கொப்பான பிரகாசத்தை மிக பளபளப்புடன் வீசச்செய்யும் “ரஜததீப்தி” எவ்வித விஷச்சரக்கும் சேராதது. விலை சீசா 1-க்கு 1-ரூபா

முதல் தரம் காபூள்காயம் ரூபாயெடை 2 அணா. 3 ரூபாயெடை டின் 1-க்கு 5 அணா. 12 ரூபாயெடை டின் 1-க்கு 14 அணா.

ஷி பஞ்சாப்(கோன்டன்)பொடி 12-ரூபா யெடை டின் 1-க்கு 14-அணா

**P. A. Iyer,**
*Pallavoor, Palghat, Malabar.*

ப. அ அய்யர்,
பல்லவூர் பாலக்காடு, மலபார்